தமிழ் முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : ௧	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி ௨௨

பொருளடக்கம்

தளபதி சிதம்பரனார்	தலையங்கம்	...	௨
வரலாறு கண்டறியாத மாநாடு		...	௬
ஆங்கிலத்திற்கு அடிமையா?	பாரதி தொண்டன்	...	௧௫
ம. பொ. சி. தலைமையுரை		...	௧௬
திரு. அரங்கசாமி சொற்பொழிவு		...	௨௬
திரு. மீனாட்சிசுந்தரனார் முழக்கம்		...	௩௭
தீர்மானங்கள்		...	௪௩
ஆசிரியருக்கு கடிதம்		...	௪௭

புகைப் படங்கள்

'முரசு' இந்த இதழின் அட்டைப் பக்கத்தில் காட்சியளிக்கும் புகைப் படத்தை தூத்துக்குடி திரு. கே. பழநிநாதன் உதவினார்.

'முரசு' 15-10-47,—1-11-47 இதழ்களின் அட்டைப் பக்கத்தில் வெளியான புகைப் படங்கள். கரூர். திரு. கே. முத்துராமலிங்கம் அவர்களால் எடுக்கப்பட்டது.

விலை 4 அணா

15-11-47

தளபதி சிதம்பரனார்

இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறி விட்டனர். அவர்களை வெளியேற்றுவதற்காக சுமார் அறுபது ஆண்டுகளுக்குமேல் வீரப்போர் புரிந்தனர் இந்திய மக்கள். தமிழ் இனத்தவரும் தங்கள் தாயகமாம் தமிழ்நாட்டின் விடுதலைக்காக அப் போரில் பங்கு கொண்டனர்; படாதபாடெல்லாம் பட்டனர். இந்திய சுதந்திரப் படையினருக்குத் திறமை மிக்க தளபதிகள் பலர், ஒருவர் பின் ஒருவராக தலைமை தாங்கினர். ஏகாதிபத்தியத்தின்மீது நமது தாய்ச் சபையாம் காங்கிரஸ் மகாசபை முதல் முதலில் நேரடித் தாக்குதலைத் துவக்கியபோது வடக்கே திலகர் பெருமானும், தெற்கே வீரச் சிதம்பரனாரும் தளபதிகளாக இருந்து தளராது போர்புரிந்தனர்.

வடக்கு முனையைவிடத் தெற்குமுனைப் போர் மிகக் கடுமையாக இருந்தது. தளபதி சிதம்பரனார் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கி, வெள்ளை வர்த்தகக் கூட்டத்தைத் தாக்கினார். ஹார்வி மில் தொழிலாளருக்குத் தலைமை தாங்கி, வெள்ளை முதலாளிகளின் மூலதனக் கோட்டையில், வேலை நிறுத்தம் எனும் 'வெடி' வைத்துத் தகர்த்தார்.

தூத்துக்குடியில் வீதிக்கு வீதி கூட்டங்கள் போட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்குமாறு மக்கள் உள்ளத்தே வீரக் கனலை மூட்டினார். இவ்வளவும் 1907-1908 ஆகிய இரண்டே ஆண்டுகளில் நிகழ்ந்தன. இதன் விளைவென்ன? ஆங்கில ஏகாதிபத்திய—முதலாளித்துவ—வாணிபக் கூட்டத்தார் ஒன்று

திரண்டு தளபதி சிதம்பரனாரை சிறைப்படுத்தி விட்டனர். நீதியென்ற பெயரால் இரு ஜென்ம தண்டனை விதித்தனர். சிறையில் செக்கு வலிக்க வைத்தனர். கல்லுடைக்கச் செய்தனர். அறுசுவை உண்டு அரசர்போல் வாழ்ந்த செல்வச் சிதம்பரனாரை கேழ்வரகுக்கூழ் குடிக்க வைத்துக் கொடுமைப்படுத்தினர். ஆம், ஏகாதிபத்தியம் சிதம்பரனாரைப் பழிக்குப் பழி வாங்கியது.

நாமக்கல் கவிஞர் கூறியது போல்,

> வல்லாளன் சிதம்பரனார் சிறையிற்பட்ட
> வருத்தமெலாம் விரித்துரைக்கில் வாய்விட்டேங்கி
> கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டக்
> கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்.

இது மிகையன்று. சிதம்பரனார் பிறவித் தலைவர். மதி படைத்த தலைவர் பலருண்டு இந்நாளில். ஆனால், அவரெல்லாம் மற்றவர் இன்னல் கண்டு உதவும் மனம் படைத்தாரில்லை. சிதம்பரனாரோ மதியும், மனமும் ஒருங்கே படைத்த மாபெரும் தலைவர்.

தளபதி சிதம்பரனார் மறைவு நாளை தமிழகம் எங்கும் கொண்டாடுவது கண்டு களிப்படைகிறோம். அவர்மட்டுமன்றி, அவரது மனைவியாரும் இன்னல் பல ஏற்றவர். அவ்வம்மையார் அருகிலிருக்க அண்ணல் சிதம்பரம் வீற்றிருக்கும் காட்சியை 'முரசு' முகப்புப் படத்தில் காணலாம்.

தளபதி சிதம்பரனாரின் நினைவுக்கு அறிகுறியாக, சென்னை 'ஜார்ஜ்டவுனை', 'சிதம்பரம் நகர்' என

ஞ

மாற்றுமாறு சென்னை நகராண்மைக் கழகத்தாரை வற்புறுத்துகிறோம். இதுமட்டும் போதாது. குமரி முதல் வேங்கடம் வரையுள்ள, சிதம்பரனாரின்—அவரைப் பெற்றெடுத்த தமிழினத்தின்—தாயகமாகிய தமிழகத்தைத் தனிநாடாக்கி, அதில் தமிழ் சோஷலிஸக் குடியரசைக் காணவேண்டும். அதுதான் சிதம்பரனாருக்கு நாம் அளிக்கும் அழியாச் சின்னம்.

தளபதி சிதம்பரனார் புகழ் ஓங்குக !

துக்கமல்ல ; வெட்கம் !

தமிழாசிரியர் "துக்கவாரம்" கொண்டாடுகின்றனர். காரணமென்ன ?

<u>ஊதியம்</u> போதவில்லை.

ஆங்கிலம் அறியாத தமிழ் ஆசிரியர்கள் அவமதிக்கப் படுகின்றனர்.

'துக்க வாரம்' கொண்டாடுவதற்கான முக்கிய காரணங்கள் இவை.

தமிழாசிரியர்கள் அவசரப்பட்டு இந்த முடிவுக்கு வரவில்லை. ஓராண்டுக்கு முன்னர் மாகாணத் தமிழாசிரியர்களை மாநாடு கூட்டினர். கல்வி அமைச்சரையும் அங்கு அழைத்தனர். ஆம், 'தமிழாசிரியர்களுக்கு 'ஸ்விச்' போடக்கூடத் தெரியாது' என்று அமைச்சர் பழித்துப் பேசியதையும் ஆசிரியர்கள்

பொறுத்துக்கொண்டு அவருக்கு அழைப்பு விடுத்தனர்.

அம் மாநாட்டில் தமிழாசிரியர்களின் குறைந்த பட்ச கோரிக்கைகள் இன்னதெனத் தெளிவாக்கினர். அந்தத் தீர்மானங்களுக்குப் பல்வேறு கட்சித்தலைவர்களின் ஆதரவையும் பெற்ற பின்னர் அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைத்தனர்.

கல்வி அமைச்சருக்குக் கருணை பிறக்குமென ஓராண்டு வரை காத்திருந்தும் பார்த்தனர். கண்ட பலன் ஒன்றுமில்லை. கடமையை நினைவூட்டியும், கருணைக்குக் கையேந்தியும் காரியம் கைகூடாமற் போகவே, கண்ணீர் சிந்தி 'துக்கவாரம்' கொண்டாடத் துணிந்தனர்.

வருங்காலத் தமிழ் சமுதாயத்தின் அறிவை, ஆண்மையை, ஆற்றலை உருவாக்கும் ஆசிரியர்களை 'துக்க வாரம்' கொண்டாடும் அளவுக்கு அசட்டை செய்தது அரசாங்கம் வெட்கித் தலைகுனிய வேண்டிய செயலாகும்.

தமிழாசிரியர்களின் முதற் கோரிக்கை ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்பது. இதில் தவறொன்றுமில்லை. உழைப்புக்கும், தேவைக்கும் ஏற்ற ஊதியம் தரவேண்டுமென்பதே காங்கிரஸின் கொள்கை. அமைச்சர் முதல், அசெம்பளி அங்கத்தினர் வரை ஊதியம் உயர்ந்துள்ளதை ஊரறியும்; உலகமறியும். அப்படியிருக்க, ஆசிரியர்கள்; அதுவும் தாய்மொழி கற்பிக்கும் தமிழாசிரியர்கள், வரு

மான உயர்வைக் கோருவதில் தவறென்ன இருக்கிறது?

தமிழாசிரியர்களுக்குள்ளேயே ஆங்கிலந்தெரிந்தவர், தெரியாதவர் எனப் பிரிவினை செய்து உயர்வு, தாழ்வுகள் பிரிப்பதை தமிழாசிரியர்கள் எதிர்க்கின்றனர். இவர்கள் மட்டுமல்ல; ஆங்கிலந் தெரிந்த தமிழாசிரியர்கள் கூட இத்தகைய வேற்றுமையை விரும்பவில்லை என்பதை நாம் அறிவோம்.

தமிழுடன் ஓரளவு ஆங்கில அறிவும் தற்காலிகமாகத் தேவையிருக்கலாம். பெரும்பாலான தமிழாசிரியர்கள் அந்த ஆற்றலை முயன்று பெருவார்கள் என்பதில் ஐயமில்லை. பிற எந்த மொழிகளையும் எளிதில் கற்பதில் பெயர் பெற்றவர் தமிழரன்றோ! ஆனால், ஆங்கிலம் தெரியவில்லை என்பதற்காக தமிழாசிரியர்களின் அறிவைப் பழிப்பதோ, வருவாயைக் குறைப்பதோ மதியற்ற செயல்; மன்னிக்க முடியாத குற்றம். ஆம்; அச்செயல் தமிழ் மொழியை இழிவு படுத்தியது போலாகும். இதைக் கல்வி அமைச்சர் அறிவாராக!

ஆங்கிலமறிந்த தமிழாசிரியருக்கும், ஆங்கிலம் அறியாத தமிழாசிரியருக்கும் உழைப்பு ஒன்றுயிருக்க, ஊதியத்தில் மட்டும் வேற்றுமை காட்டுவானேன்? மற்றும் வாழ்க்கையின் தேவைகள் கூட அவ்விரு தரப்பினருக்கும் ஒன்றுபோலத்தான். அப்படியிருக்க, வருவாயில் மட்டும் வேற்றுமை காட்டுவது வயிற்றிலடிக்கும் கொடுஞ் செயலல்லவா? இந்தப் பிரச்னை வெறும் வருவாயைப் பொறுத்தது மட்டு

மல்ல; தமிழாசிரியர்களின்-ஏன்? தமிழ் இனத்தின் தன் மானத்தைப் பொருத்தது மாகும். எனவே அரசாங்கம் இனியும் காலந் தாழ்த்தாது கடமையைச் செய்யுமாக.

தமிழாசிரியர்க் குற்ற இந்த அவல நிலையைப் போக்கத் தமிழ்த் தலைவர்களும், பொது மக்களும் முற்படவேண்டும். நாடெங்குமுள்ள கழகங்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டியும், அவற்றை ஏற்குமாறு வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கப்பலோட்டிய தமிழன்

இந்திய சுதந்திரப் போரின் தமிழகத் தளபதி, வீரர் வ. உ. சிதம்பரனாரின் புரட்சி மிக்க வாழ்க்கை வரலாறு.

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதியது. புதிய பதிப்பு வெளிவந்து விட்டது.

விலை ரூ. 1—4—0

இன்ப நிலையம்

தியாகராய நகர் சென்னை 17

வரலாறு கண்டறியாத மாநாடு

நெடுநாட்களாக எதிர்பார்த்துவந்த தமிழரசுக் கழக மாநாடு கடந்த 9-11-47ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் கூடியது. அரண்மனைக்காரன் தெருவின் தெற்குப் பக்க நுழை வாயிலிலும், மண்டப வாயிலிலும் போட்டிருந்த அலங்காரப் பந்தல்கள் மாநாட்டிற்கு அழகு செய்தன.

மாநாடென்றால் 'தலைவர் ஊர்வலம்' என்ற சடங்கு கட்டாயம் நிகழ்ந்தே தீரும். அது நிகழாவிடில் மாநாட்டுத் தலைவருக்கும் மகிழ்ச்சி யிராது. இந்த மாநாட்டிலும் வரவேற்புக் குழுவினர் தலைவர் ஊர்வலத்திற்கு ஏற்பாடுசெய்ய முனைந்தனர். என்றாலும், தலைவர் ம. பொ. சி. தனது பெயரால் இந்தச் சடங்கு நடப்பதை விரும்பாததால்தலைவர் ஊர்வலத் திட்டம் கைவிடப்பட்டது.

மாநாடு காலை 10 மணிக்குக் கூடியது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து, 202 பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவர்களில் பல்வேறு சமயத்தினரும் கலந்திருந்தனர். என்றாலும், அவர்கள் உள்ளத்தே மத உணர்ச்சி மறைந்து தமிழர் என்ற இனஉணர்ச்சியே மேலோங்கியிருந்தது.

துவக்கத்தில் திரு. ம., பொ. சி. தமிழக்கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். "உங்கள் கட்சியின் கொடி

என்ன?" என்று இத்தனைநாளும் அன்பர்கள் ஓயாது எழுதிக் கேட்டனர்"........தமிழ்க்கொடியை ஏற்க ம. பொ. சிக்கு மனமில்லை" என்று ஏட்டில் எழுதி நாட்டுக்கு அறிவித்தார் நண்பர் ஒருவர். "இல்லை, இல்லை; மூவர்ணக் கொடியின்கீழ் நின்றுதான் அவர் கட்சி நடத்த விரும்புகிறார். அவரை நம்பாதீர்கள்" என்றனர் மற்றுஞ் சில அரசியல் அறியா அவசரக் குடுக்கைகள். இவ்வளவுபேரையும் தூக்கிவாரிப் போட்டுவிட்டது, ம. பொ. சி தமிழ்க் கொடியைப்பற்றிச் செய்த சொற்பொழிவு. இதோ கேளுங்கள் :

"எந்தக் கை இத்தனை நாளும் மூவர்ணக் கொடியைத் தாங்கியதோ, அதே கை தான் இன்று தமிழ்க் கொடியைத் தூக்குகின்றது. எந்த வாய் 'தாயின் மணிக்கொடி (மூவர்ணக் கொடி) வாழ்க', என்று வாழ்த்தியதோ, அதே வாய் தான் இன்று "தமிழ்க் கொடி வாழ்க" என்று வாழ்த்துகின்றது. இதில் முரண்பாடொன்றுமில்லை. எப்படியெனில், மூவர்ணக் கொடி இன்று காங்கிரசின் கட்சிக் கொடியல்ல; இந்திய உபகண்டத்துள்ள பல்வேறு இனங்களையும் பிணைக்கும் உறவுக் கொடி. தமிழ்க் கொடியோ வரலாற்று வழியே தமிழகத்தில் தமிழரசை நிலைநாட்டும் உரிமைக் கொடி. ஆம்; உறவுக்குச் சின்னம் தேசீயக் கொடி; உரிமைக்குச் சின்னம் தமிழ்க் கொடி. இதை மறத்தல் கூடாது."

தேசீயக் கொடி ஒன்று போதாதா; இன்னொரு தமிழ்க் கொடி எதற்காக? என்று எனது தேசியத் தோழர்கள் நினைக்கலாம் இன்று தேசியக் கொடியில் காந்தீயச் சின்னமான ராட்டின மில்லை; அசோக சாம்ராஜ்யச் சின்னமான அறவாழியே காட்சி யளிக்கின்றது. காரணமென்ன? உரிமை

பெற்ற இந்தியா பண்டைப் பெருமையைக் கடைப் பிடிக்க வேண்டுமெனத் தலைவர்கள் நினைத்தனர், இது நியாயம் தான்.

அதே நியாயப்படித்தான் நாமும் தமிழ்க் கொடி உயர்த்தியுள்ளோம். அசோக சாம்ராஜ்ய காலத்திலும் அதற்குக் கட்டுப் பட்டுக் கப்பஞ் செலுத்தாது தனியாட்சி செலுத்தினர் மூவேந்தர். இது பண்டைக் கதை. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து விட்ட அசோக சாம்ராஜ்யத்தின் அறவாழிச் சின்னம் இன்றைய அரசியலில் ஆதிக்கம் பெறுமானால், அந்தசாம்ராஜ்யம் அழிந்து பதின் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் ஆட்சி புரிந்து வந்த தமிழ் மூவேந்தரின் சின்னங்களைத் தாங்கிய இந்தத் தமிழ்க் கொடி தமிழகத்தின் அரசியல் சின்னமாக விளங்குவதில் தவறென்ன இருக்கிறது.

என்றார்.

ம. பொ. சி.யின் சொற்பொழிவுக்குப் பின்னர் நம் தமிழக்கொடி அரசியல் உலகத்தில் ஒரு தனி மதிப்புப் பெற்றதெனலாம்.

பின்னர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்.

அதற்கடுத்தபடியாக மாநாட்டின் நடவடிக்கைகளைத் துவக்கிவைத்து மதுரை 'தமிழ்நாடு' ஆசிரியர் திரு. ரா. அரங்கசாமி 'மாஜினி' அரிபதோர் சொற்பொழிவாற்றினார். (இவ்விருவரது பேச்சுக்களையும் வேறு இடங்களில் காண்க.)

திரு. தெ. பொ. மீயின் வரவேற்புரையில் "தமிழன் என்ற இன உணர்ச்சியானது வெறியாக மாறி ஹிட்லரிசத்தை வளர்க்கக் கூடாதென்றும், இந்தியாவின் பிறபகுதிக

ளோடு தமிழகம் உறவு கொள்ள வேண்டுமென்றும் எச்சரித்தார். ஆனால், தமிழகம் பிரிந்தால்தான் உரிமை வாழ்வு நடாத்த முடியுமென்றால் பிரிவினை வரவேற்கத்தக்கதே" என்று முழங்கினர்.

திரு. அரங்கசாமியின் துவக்க உரை துடிப்பு வாய்ந்த நடையில் கேட்போருக்கு உணர்ச்சியூட்டும் வகையில் இருந்தது. அவர் வெளியிட்ட கருத்துக்கள் தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை முற்றும் தழுவியிருந்தன.

பின்னர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. ம. பொ. சியை மாநாட்டுக்குத் தலைமை தாங்குமாறு பிரேரேபித்தார். திருவாளர்கள். த. செங்கல்வராயன், எஸ். கே. சாமி, கே. காமராஜர், தாதுலிங்க முதலியார் ஆகியோர் அதை ஆமோதித்துப் பேசினர்.

ம. பொ. சி தலைமைப் பீடத்தில் அமர்ந்து வ. உ. சியின் திருவுருவப் படத்தைத் திறக்குமாறு திரு. வி. கவைக் கேட்டுக்கொண்டார்.

அறிஞர் திரு. வி. க., வ. உ. சி யுடன் பழகியவர். எனவே அவரைக்கொண்டு வ. உ. சி யின் படத்தைத் திறக்க வைத்தது மிக மிகப் பொருத்தமான காரியம்.

அடுத்தபடியாக மாநாட்டுத் தலைவர் திரு. ம. பொ. சி தமது தலைமை உரையை நிகழ்த்தினர். (விளக்கத்தை வேறொரு பக்கத்தில் காண்க.)

திரு. வி. க வைப்பற்றி ம. பொ. சி கூறுகையில் 'திரு. வி. க பெரும்புலவர், திருவாசகத்தை உள்ளத்தில் வைத்

துப் போற்றும் உத்தமர்; அவரை கட்சிக் கண்கொண்டு பார்ப்பது கூடாது. ஊனினைச் சுருக்கி, உள்ளொளி பெருக்கி, உவப்பிலா ஆனந்தமாய தமிழ்த் தேனினைப் பருகும் வண்டு நம் திரு. வி. க. கடலூர் சென்றாலும் அவர் சட்டை கருப்பு நிறமாகவில்லை. எனவே, அவர் எங்கு போகிறார்; எந்தக் கட்சியை ஆதரிககிறார் என்பதுபற்றி தமிழரசுக் கழகத்தார் கவலை கொள்ளவில்லை" என்றார்.

தலைமை உரையுடன் மாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பிற்பகல் 2-30 மணிக்குப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் தலைவர் ம. பொ. சி. யின் கருத்திற் கிணங்க, பிரதிநிதிகள் ஒவ்வொருவராக எழுந்து நின்று தம்மைச் சபைக்கு அறிமுகப்படுத்திக் கொண்டனர். பின்னர் தலைவர் முகவுரையில், "ஏதோ ஒரு சிலரைக்கொண்டு தமிழரசுக் கட்சி என நான் ஆரவாரம் செய்து வருவதாகச் சில அன்பர்களும், பிற கட்சியினரும் குறை கூறுவதாகக் கேள்வியுற்றேன். இப்போது நீங்கள் நேரில் பார்க்கிறீர்கள். எல்லாத் தமிழ் ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். அவர்களில் வணிகர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், பத்திரிகாசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய சமூகத்தின் பலதிறப்பட்ட மக்களும் பிரதிநிதிகளாக வந்துள்ளனர். சுமார் 45க்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் நாடெங்கும் தோன்றியுள்ளன. இம்மாநாட்டிற்குப் பிறகு ஜில்லாக்கள், தாலுக்காக்கள், கிராமங்கள் தோறும் மாநாடுகள் கூட்டி, கட்சியைப் பலப்படுத்தப் போகிறோம். யாரிடமும் நமக்குப் பகையில்லை. ஆனால் நமது உரிமையை எதிர்ப்பவரிடம் நாம் உறவுகொள்வது முடியாது. இம் மாநாடு முடிந்ததும் பிரதிநிதிகளாகிய

நீங்கள், உங்கள் ஊர்களுக்குச்சென்று நமது கழகக் கொள் கைகளைத் தீவிரமாகப் பரப்பவேண்டும் என்ருர்.

பின்னர் தலைவர் தேர்தல் முடிந்ததும், பிரதிநிதிகளால் அனுப்பப்பட்டு, வரவேற்புக் குழுவினரால் முறைப்பட தொகுக்கப்பட்டிருந்த தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டது. இரண்டொரு தீர்மானங்கள் திருத்தப்பட்ட பிறகு எலலாத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் பிரதி நிதிகள் கூட்டம் முடிவுற்றது.

மாலை 5 மணிக்கு மீண்டும் பகிரங்க மாநாடு கூடியது. காலையைவிட கூட்டம் இரண்டு மடங்காகக் கூடி இருந்தது. திருவிதாங்கூர் பிரதிநிதியாகிய திரு. இரா. கங்காதரன் திருவிதாங்கூர் தமிழருக்குள்ள குறைகளையும் திருவிதாங் கூர் தமிழர் நடத்திவரும் சுதந்திரப் போராட்டத்தின் வர லாற்றையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

அவருக் கடுத்தபடியாக புதுவைப் பிரதிநிதியான தமி ழாசிரியர் சிவ. கண்ணப்பன், பிரெஞ்சுத் தமிழகத்தில் தமிழர் படும் அல்லல்களையும், பிரெஞ்சு ஏகாதிபத்யம் கையாளும் கொடிய அடக்குமுறைகளையும் தெளிவாக விரித்துரைத்த தோடு புதிய தமிழகத்தில் பிரெஞ்சுத் தமிழகம் இணைந்தே தீரவேண்டுமெனக் கூறினர்.

சித்தூர் ஜில்லா பிரதிநிதியான வழக்கறிஞர் திரு. அரங்கஞக முதலியார், திருப்பதிமலையுள்பட சித்தூர் ஜில் லாவின் தமிழ்த் தாலுக்காக்களையும் தமிழகத்தோடு சேர்ப் பதற்கான ஆதாரங்களைப் புள்ளி விவரங்களோடு விளக்கிப் பேசினர். அவரை யொட்டி ஆசிரியர் மங்கலங்கிழார் பேசு

கையில், சித்தூர் ஜில்லாவில் அரசாங்க—ஸ்தல ஸ்தாபனப் பதவிகளிலெல்லாம் ஆந்திரர்களே அதிகமாக இருக்கின்றனர் என்றும் தமிழரின் பிள்ளைகள் தமிழ்ப் படிக்க வசதி இல்லையென்றும் உணர்ச்சி ததும்ப உரைத்தார்.

பின்னர், திரு. சச்சிதானந்தம்பிள்ளை, தமிழர்கள் சாதி, மத, கட்சி பேதமின்றி ஒன்றுசேர்ந்து தமிழகத்தைத் தனி நாடாக்கப் பாடுபடவேண்டுமென்றார். திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கம் பெண்களின் சார்பாக வீர முழக்கம் செய்தார். தமிழகத்தின் விடுதலைப் போருக்கு ஆண்களைப் போலவே பெண்களும் ஆதரவு காட்டவேண்டுமென்றும் சென்னையை ஆந்திரர்கள் பறிக்க முயன்றால், பெண்கள் வீட்டைப் பூட்டி வெளியேறி, வீரமுடன் எதிர்க்கவேண்டுமென்றும் கூறினார். நாஞ்சில் மணி இளைஞர்களின் சார்பாக தமிழரசுக்கழகத்தை ஆதரித்துப் பேசுகையில், ம. பொ. சி. யின் தலைமையில் தமிழ் இளைஞர்கள் ஒன்று திரண்டு தமிழகத்தில் தமிழரசு காணப் பாடுபடுவது திண்ணம் என்றார்.

இறுதியாக தலைவர் முடிவுரை கூறியபின்னர், திரு. கொ. மொ. ஜனார்த்தனம் நன்றி கூறினார். 'தமிழ் வாழ்க', 'தமிழினம் வாழ்க,' 'தமிழ் நாடு வாழ்க,' 'தமிழரசுக் கழகம் வாழ்க' என்ற வாழ்த்தொலிகளுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

திருவிதாங்கூர் தமிழ்த் தாலுக்காக்கள் தமிழ் நாட்டோடு சேருவதா? ஐக்கிய கேரளத்தோடு சேருவதா? என்பதை முடிவு செய்ய அங்குள்ள தமிழருக்குச் 'சுய நிர்ணயம்' வேண்டும்.

சென்னை மாகாணம் மொழிவழி நாடுகளாகப் பிரிக்கப்படும் வரை, திருவிதாங்கூர் தமிழ்த் தாலுக்காக்கள் மன்னர் ஆட்சியின்கீழ் தனி மாகாணமாக இருக்க வேண்டும்.

இவைதான் தமிழரின் கோரிக்கைகள். இதை ஏற்பதில் திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக்கோ, அல்லது அங்குள்ள மலையாளிகளுக்கோ ஒரு நஷ்டமும் ஏற்படப் போவதில்லை.

முதல் கோரிக்கையை திரு. சி. பி. திவானாக இருந்த காலத்தில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. "திருவிதாங்கூர், ஐக்கிய கேரளத்தில் கலக்குமானால், அதிலுள்ள தமிழ்த் தாலுக்காக்கள் தமிழ் நாட்டோடு சேருவது இயற்கையே யாகும்" என்று திருவிதாங்கூர் அசெம்பிளியில் எழுந்த கேள்விக்கு அளித்த பதிலில் திவான் சி. பி. குறிப்பிட்டார். இது அரசாங்கத்தின் சார்பாக திவான் அளித்த பதில் என்பதை மறந்துவிடக் கூடாது. மற்றும், தமிழரின் சுயநிர்ணயக் கோரிக்கையை சமஸ்தான காங்கிரசும் முன்பே அங்கீகரித்துள்ளது. எனவே, திருவிதாங்கூர் தமிழர்கள் தமிழ் நாட்டோடு

சேரவேண்டுமென்ற கோரிக்கையை நாணயமுள்ள எந்த மலையாளியும் மறுக்க முடியாது.

இரண்டாவது கோரிக்கை, திருவிதாங்கூரில் தமிழருக்குத் தனி மாகாணம் தருவது. முதல் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு விட்டதால் தமிழர் 'தனி இனம்' என்றும், அவர்கள் வாழும் தாலுக்காக்கள் 'தனி (தமிழ்) நாட்டின் பிரதேசங்கள்' என்றும் ஏற்றுக் கொண்டதாகிறது. இதன்படி ஒரு குறிப்பிட்ட காலம்வரை தமிழ்த் தாலுக்காக்களை ஒன்று படுத்தி மன்னராட்சியின் கீழ் தனி மாகாணமாக்கச் சிக்கலொன்று மில்லை.

ஆனால், திருவிதாங்கூர் மலையாளத் தலைவர்களுக்கு அதிகாரம் கைக்குக் கிடைத்தவுடனே, ஆதிக்கவெறி மண்டைக்கு ஏறிவிட்டது. மலையாளிகள் பெரும்பான்மையினராக இருப்பதால், சிறுபான்மையினரான தமிழர்களிடம் நேர்மையாக நடந்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றனர். திருவிதாங்கூர் தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்கள் பிற்போக்கு வாதிகளல்லர். சிறந்த தேசிய வாதிகள். பொறுப்பாட்சிப் போராட்டத்தில் மலையாளிகளோடு தோளோடு தோள் நின்று தடியடி, சிறைவாசம் போன்ற இன்னல் பல ஏற்றவர்கள். இவை யனைத்தையும் மறந்து மலையாளிகள் நன்றி கெட்டதனமாக நடந்து கொள்வது என்றால், அதுவும் தேசீயத்தின் பெயரால், தமிழ் தேசபக்தர்களுக்குத் தீங்கிழைப்பது என்றால், தமிழர் மட்டுமல்லாமல் ஒவ்வொரு தேசீய வாதியும் அதை எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்தான் பதினைந்து லட்சம் தமிழர்களின் ஒரே அரசியல் அமைப்பாக விளங்குகிறது.

எனவே, சமஸ்தான காங்கிரசும், அரசாங்கமும் தமிழ்நாடு காங்கிரசை தமிழர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக அங்கிகரித்து அதனுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அஃதின்றி பதவி வேட்டைக்காரர்களை தமிழர்களின் பிரதிநிதியாகக் கொள்வதோ, ராணுவத்தைக் கொண்டு தமிழ் தேச பக்தர்களின் எழுச்சியை அடக்குவதோ அறிவு டைமை அல்ல. அவை, மலையாளிகளுக்கும் தமிழர் களுக்கு மிடையே என்றும் அழியாத பகைமைத் தீயை வளர்த்து விடுமென்றும் எச்சரிக்கிறோம். இவ் அமையவிருக்கும் ஐக்கிய கேரளத்திற்குத் தமிழ் நாட் டாரின் ஆதரவு பலவகையிலும் இன்றியமையாதது என்பதை மலையாளிகள் மறந்துவிடக் கூடாது.

திருவிதாங்கூர் தமிழர்களின் கடமை தெளிவாக இருக்கிறது. பெரும்பான்மையினர் அநீதி இழைக் கிறார்கள் என்ற காரணத்தால், நாம் அமைதி இழந்து ஆத்திரம் கொள்வோமானால், அது நமக்கே கேடாய் முடியும். எனவே, மலையாளிகள் மீது ஆத்திரம் கொள்வதை விட்டு, இரண்டரைக்கோடி தமிழ் மக் களின் ஆதரவைப் பெறுவதிலேயே அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதில் வெற்றி பெற்று விட் டால் அப்புறம் திருவிதாங்கூர் தமிழர்களைச் சிறு பான்மையினராக எண்ணி, அவர்களைக் கேவலமாக நடத்த மலையாள ஆட்சிக்குத் துணிவிருக்காது.

மற்றும், அடுத்துவரும் தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸ் தமிழ் தாலுக்காக்களுக்குரிய எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றி, அதற்கப்புறம் சமஸ்தான அரசாங்கத்துடன் பார்லிமென்டரி முறையில் ஒத்துழையாமை நடத்தவேண்டும். இதன்மூலம் சிறுபான்மைத் தமிழரின் கோரிக்கையை அரசியல் உலகுக்கு அறிவிக்க முடியும். சட்டரீதியான எல்லா முறைகளையும் கையாண்டும் கோரிக்கை நிறைவேறாவிட்டால், அப்பால் அரசாங்கத்துக்கு எதிராக சாத்விக சட்ட மறுப்புப் போர் துவங்கலாம். இதுதான் கடைசி ஆயுதம். மலையாள ஆதிக்கவாதிகள் அடுத்து வரும் தேர்தலுக்கு முன்னர் தமிழ் தாலுக்காக்களில் கலகத்தைக் கிளப்ப முயல்கின்றனர். அதனால் தமிழ் தலைவர்களைச் சிறைப்படுத்தித் தேர்தலில் தமிழ் துரோகிகளைத் தேர்ந்தெடுக்கச் செய்யலாமென்று நம்புகின்றனர். இந்தச் சூழ்ச்சியை திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தனது அரசியல் தந்திரத்தால் முறியடிக்க வேண்டும்.

தமிழ் நாட்டவரை வேண்டுகிறோம்: 'சமஸ்தானம்' என்ற திரையைக் கண்டு மயங்காதீர்கள். தமிழ் இனத்தில் ஒருவருக்கு ஊறு செய்தாலும், அப்படிச் செய்தது இந்த உலகமே யானாலும் அதை எதிர்த்துப் போரிட்டே ஆகவேண்டும். சமஸ்தானம் என்ற திரை மறைவில் பதினைந்து லட்சம் தமிழர்களை மலையாள ஆட்சி கொடுமைப் படுத்த இனியும் இடங்கொடுப்பதா? அவர்கள் என்ன திக்கற்றவர்களா? இல்லை; இல்லை. அவசியமானால், திரையைக்

கழித்தேனும் அங்குள்ள தமிழர்களுக்குத் துணைபுரிய இப்போதிருந்தே தயாராவோம்!

தமிழ் மக்களே!

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் இரண்டாயிரம் சதுர மைல்கள் தமிழ் நாட்டோடு சேரவேண்டியவை. அதைத் தமிழ் நாட்டோடு சேர்ப்பதற்காக அங்குள்ள தமிழ் மக்கள் போராடுகின்றார்கள். தாய் நாட்டோடு சேர விரும்பும் அவர்களைத் தமிழ் நாட்டார் ஆதரிக்க வேண்டாமா? அவர்கள் போராட்டம் வெற்றி பெற்றால்தான் நாம் இழந்துவிட்ட தமிழகத்தின் தெற்கெல்லையான குமரிமுனை திரும்பிவரும்; அப்போதுதான் நாம் காணவிரும்பும் புதிய தமிழகம் உருவாகும்.

திருவிதாங்கூரில் மலையாள மொழி கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது. ஆனால், பதினைந்து லட்சம் தமிழருக்கு தமிழ்மொழி கற்கப் பள்ளி இல்லை. அரசாங்க உத்தியோகங்களில் தமிழருக்கு இடமில்லை, எல்லாம் மலையாளிகள் ஆதிக்கம்.

நாஞ்சில் நாடென்பது தமிழர் நாடு. அங்கு விவசாயப் பண்ணைகளில் பாடுபடுவோர் தமிழ் உழவர். ஆனால், அறுவடை காலத்தில் அரசாங்க அதிகாரிகள் உருட்டல் மிரட்டல் செய்து தானியங்களைத் திரட்டிக் கொண்டு போய் திருவிதாங்கூர் முழுவதற்கும் உணவளிக்கின்றனர். பாடுபட்ட தமிழ் உழவாளிகள் உணவுப் பஞ்சத்தால் உடல் இளைக்கின்றனர்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கைத்தொழில்கள் வேகமாக வளர்ச்சி பெறுகின்றன. ஆனால், எல்லாம் மலையாளிகள் வசிக்கும் வட பகுதியில்தான். தமிழர் வாழும் தென் திருவிதாங்கூரில் தொழிற்சாலைகள் இல்லை.

ஆம். திருவிதாங்கூர் தமிழர்களுக்கு உணவில்லை. உழைத்துப் பிழைக்கத் தொழிலில்லை. தாய்மொழிக் கல்வி இல்லை. அரசாங்கப் பதவிகளில்லை. பிற உரிமைகளுமில்லை. எனவே, தமிழர் தங்கள் வாழ்வை தாங்களே நிர்ணயிக்க மன்னர் ஆட்சியின்கீழ் தனி மாகாணம் வேண்டுகின்றனர். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின்கீழ் ஒன்றுபட்டு நின்று 'தமிழ்நாடு தமிழருக்கே,' 'ஒரு அங்குல நிலத்தையும் விடமாட்டோம்' என்று விண் இடியக் கோஷிக்கின்றனர்.

கிளர்ச்சியைக் கண்டு ஆத்திரம் கொண்ட மலையாளிகளும், மன்னர் ஆட்சியினரும் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்களைக் கண்ட கண்ட இடங்களில தாக்குகின்றனர். களவும், கலகமும் செய்ததாகப் போலீசார் பொய் வழக்குத் தொடுக்கின்றனர். பல வீரத் தொண்டர்கள் அடக்குமுறைக்குப் பலியாகி, சிறையில அடைப்பட்டுக் கிடக்கின்றனர். 'தாய்த் திருநாட்டீர், தயவு செய்து எங்களுக்கு ஆதரவு காட்டுங்கள்' என்று சிறைக்குள்ளிருந்து அபயக் குரல் கொடுக்கின்றனர்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளையும், பல்வேறு கழகங்களையும் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு ஆதரவு அளிக்க முன் வருமாறு வேண்டுகிறோம். தமிழ் நாடெங்கும் கூட்டங்கள் போட்டுப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றி

திருவிதாங்கூர் மன்னர், திவான், சமஸ்தான காங்கிரஸ் தலைவர் பட்டம் தாணு ஆகியோருக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

தீர்மானம்

திருவிதாங்கூரில் உள்ள சிறுபான்மைத் தமிழர்களின் தனி மாகாணக் கோரிக்கையை உடனே அங்கீகரிப்பதுடன், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்கள் மீது கையாளும் அடக்கு முறைகளை உடனே நிறுத்தி, சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு திருவிதாங்கூர் மன்னர் சர்க்காரை தமிழ்நாட்டு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை அங்கீகரித்து, அதன் கோரிக்கைகள் நிறைவேற ஒத்துழைப்பதின் மூலம் தமிழர், மலையாளி உறவை வளர்க்கப் பாடுபடுமாறு சமஸ்தான காங்கிரசுக்கு தமிழ் மக்கள் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்படிக்கு

தமிழரசுக் கழகத்தார்.

வ. உ. சி. நினைவு வாரம்

'ஜார்ஜ் டவுனை'—'சிதம்பரம் நகராக' மாற்றக் கோரிக்கை.

வ. உ. சி. நினைவு வாரத்தை நவம்பர் 18 முதல் தமிழ் மக்கள் எங்கும் கொண்டாடினர். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திராவிடக் கழகம், தமிழரசுக் கழகம் ஆகிய பல்வேறு அரசியல் கட்சியினரும், வ. உ. சி விழாவில் பங்கு கொண்டனர்.

எல்லாக் கூட்டங்களிலும், சென்னை 'ஜார்ஜ் டவுனை', 'சிதம்பரம் நகர்' என மாற்றுமாறு சென்னை அரசாங்கத்தாரையும், நகராண்மைக் கழகத்தாரையும் வற்புறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

[வ. உ. சி. நினைவுவார விழாவின் நிகழ்ச்சி விவரங்களை தமிழகம் எங்குமுள்ள பல்வேறு கழகங்களும் நமக்கு அனுப்பி வைத்ததற்கு நன்றி கூறுகிறோம். அவையனைத்தையும் பிரசுரிக்க விருப்பமிருப்பினும் இடமின்மையால் விடுபட்டதற்கு வருந்துகிறோம்—ஆசிரியர்]



9-11-47-ல் சென்னையில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டின்போது எடுத்த புகைப் படம்.

18-11-47.

ஐயா,

சில நாட்களுக்கு முன்னர் தாங்கள் 'தமிழ் முரசி'ல் 'வேங்கடத்தை விடமாட்டோம்' என்று எழுதப்பட்டிருந்ததைப் படித்து பெருமகிழ்ச்சி யடைந்தேன். சென்னையில் தங்கள் தலைமையில் நடைபெற்ற தமிழரசுக்கழக மாநாட்டின் நிகழ்ச்சிகளையும் பத்திரிகைகளில் படித்தேன்.

தங்கள் பெருமுயற்சிக்கு எதிரிடையாக கம்யூனிஸ்டு கட்சியினரும், ஆந்திரரும் செய்துவரும் செயல்களைப் பார்த்தால், தமிழ்நாடு தனியாகப் பிரிந்தாலும், அதன் பொருளாதார நிலையைக் குன்றவைக்கவும், கடன் பளுவைச் சுமத்தவும் திட்டமிட்டு விட்டனர் எனத் தெரிகிறது. இதன் விளைவாக, வருங்காலத் தமிழரசு, நாட்டின் மேன்மைக்கும் மக்கள் நன்மைக்குமாக அரியபெரிய செயல்களைச் செய்யமுடியாது திண்டாட நேருமென்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" (18-11-47) பத்திரிகையில், தமிழ் நாட்டுப் பிரிவினையைப் பற்றி கம்யூனிஸ்டுக் கட்சியினர் (தமிழ்—ஆந்திரா இரு நாடுகளும் சேர்ந்து) வெளியிட்டுள்ள அறிக்கை பிரசுரமாகியிருக்கிறது. அதில் கண்டுள்ள வழிக்கு தாங்கள் இடங்கொடுக்க மாட்டீர்கள் என்றே நம்புகின்றேன்.

கம்யூனிஸ்டுகள் அறிக்கையில், தமிழ்நாட்டிற்கே பிரிட்டிஷார் அதிக சலுகைகள் காட்டியிருப்பதாயும், அதனால் சொத்து பிரிவினையின்போது ஆந்திரர்களுக்கு சலுகை யிருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பது வியப்பை யளிக்கிறது.

ஆந்திராவில் கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் பாசனங்களுக்கு தேவையான ஏராள நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் காவேரி டெல்டா பாசனம் வெகு காலத்துக்கு முன் ஏற்பட்டது,

மேட்டூர் பாசன அணைக்கட்டும் பெரியார் பிராஜக்ட்டும் தான் புதியவை. உணவுப் பொருள்கள் முதலியவைகளில் மிக நீண்ட காலமாக ஆந்திர நட்டுககுத் தமிழ்நாடு செய்து வரும் உதவிகளைக் கவனித்தால் மேற் சொன்ன இரண்டு பிராஜக்ட்டுகளுக்காக செய்யப் பட்டிருக்கும் செலவுத் தொகை ஒரு பெரிதல்ல.

துங்கபத்ரா பிராஜக்ட், ராமபாத சாகரம் திட்டம் ஆகிய வைகளுக்காக சுமார் 100 கோடி ரூபாய் கடன் ஏற்படும். இத் திட்டங்களால் தமிழருக்கு துளியளவும் நன்மையில்லே. ஆனல், கடனுக்கு மட்டும் தமிழர் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது.

ஜமீன் ஒழிப்பால் நன்மை பெறுபவர்களும் ஆந்திரர்களே. ஜமீன் நிலங்கள் ஆந்திர நாட்டில் 211 லட்சம் ஏக்கர். தமிழ் நாட்டிலோ 41 லட்சம் ஏக்கர்தான் இருக்கிறது. இதனுல் நஷ்ட ஈட்டுத் தொகையை ஆந்திர நாட்டினரே அதிகமாகப் பெறுவர். பிறகு பொருளாதாரத்தையும் கடனையும் பிரிக்கும்போது ஜமீன் ஒழிப்பால் ஏற்பட்ட கடன் தமிழ் நாட்டின் பேரில்தான் அதிகம் சுமத்தப்படும்.

சமீபத்தில் விசாகப்பட்டினம் துறைமுகம் புதிதாக நிர்மாணிக் கப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்கள் அடைந்த நன்மைகள் எவ்வளவோ உண்டு.

இந்த நிலையிலும், என்ன காரணததாலோ ஆந்திர நாட்டுக்கு தனிச் சலுகைகள் காட்டவேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சியினர் சொல்லுகின்றனர். தமிழ் நாட்டை ஒழிக்கும் சதிக்கு உடந்தையாகி விட்டார்களோ என்று வருந்த வேண்டியிருக்கிறது.

தாங்கள் தமிழ் நாடு விரைவில் பிரிவதற்காகப் பாடுபடுவதுடன் தமிழ் நாடு பிரிந்த பிறகு அதன் பொருளாதார வளம்குன்றுதிருக்கவும், கடன் பளு அளவுக்கு மீறி ஏறுதிருக்கவும் இப்போதிருந்தே எச்சரிக்கையாக வேலே செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஆர். சீனிவாசன்

அட்டைப்பட விளக்கம்

தமக்கே உரிய தீந்தமிழ் நடையுடன் மக்கள் உள்ளத்திலே தமிழிலக்கியத் தேனைப் பாய்ச்சி மகிழ்ச்சியூட்டும் கலைஞர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களாவர். அவர் பேச்சிலே, சிறப்பாக இளங்கோவும், வள்ளுவரும், கம்பரும் துள்ளி விளையாடுவார்கள். வகுப்புகளிலே ஒரு சிலருக்குத்தான் தமிழிலக்கியங்களை எடுத்துரைக்க இயலும் என்றிருந்த முறையை மாற்றி, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கூடியுள்ள பொது மேடைகளில், சிலப்பதிகாரம் போன்ற சிறந்த நூல்களை முறையாகப் பாடம் சொல்லி, மக்களுக்குத் தமிழுணர்வூட்டிய பெருமை அவருக்குண்டு. சென்னை கோகலே மன்றத்தில் இவ்வாறு அவர் செய்த தொண்டைக் கண்டு தமிழகமே வியந்து அவரைப் பாராட்டியது.

"சொல்லின் செல்வர்" என்ற பட்டத்தைப் பொது மக்கள் அவருக்கு அன்புடன் அளித்தனர். ஆனால், இன்று அவர் சொல்லின் செல்வராக மட்டுமல்லாமல், போராட்ட வீரராகவும் திகழ்கின்றார். தமிழ்ச் சொல்லாக்க கமிட்டியில் உறுப்பினராயுள்ள இவ்வறிஞர், தமிழ் மொழியைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் அங்கு ஒரு சிலர் செய்துவரும் சதிச்செயல்களை எதிர்த்துப் போராடி வருகிறார்.

தம்முடைய சொல்வன்மையாலும், வீரச் செயலாலும். தமிழினத்துக்குத் தொண்டு செய்துவரும் அவர், இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கி வருவதைக்கண்டு தமிழ்நாடே பெருமகிழ்ச்சி யடைகின்றது. தமிழினம் அவர் தொண்டால் மேலும் பயன் பெறுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்கள் அழுத கண்ணீர் ...!

புலவர். ச. சங்கரலிங்கம்.

தமிழ் நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் எனக் கிளர்ச்சி செய்யும் இக்காலத்தில்—தமிழ் வளர்ச்சிக்காகத் தொண்டு செய்ய மந்திரிமார்கள் மார்புதட்டிக் கிளம்பியிருக்கின்ற இக்காலத்தில்—தாய்மொழிக்குத் தனியிடம் கொடுக்க வேண்டும் என தணியாப் பற்றுடன் மன்றாடும் இக்காலத்தில் — தமிழ் ஆசிரியர்களைக் கவனியாது— அவர்களின் ஊதியத்தை உயர்த்தாது அரசாங்க மிருப்பது வருந்தத் தக்கதாகும்.

'ஆங்கிலம் வேண்டாம்' என ஓயாது பறைசாற்றும் போது தமிழ் ஆசிரியர்களுக்குமட்டும் ஆங்கிலம் வேண்டும் எனக் கேட்பது அநீதியாகும். தமிழ் பண்டிதர்களுக்குப் பொது அறிவு இல்லை என்று சொல்லப்படுகின்றது. பள்ளிப் படிப்பு—பட்டம்—பதவி—இவைகள்தானா ஒருவனுடைய அறிவையும் ஆற்றலையும் அளக்கும் அளவுகோல்-? கலாசாலைப் பட்டமே ஒருவனுடைய அறிவை அளக்குமானால், இயேசுநாதர், மகமது நபி, பரமஹம்ஸர், மாணிக்கவாசகர் இவர்கள் எல்லோரும் எக்கல்லூரியில் சென்று பட்டம் பெற்றனர்-? இவர்கள் இன்றளவும் உலகத்தாரால் போற்றப்பட வில்லையா-? தமிழ்நாடு தந்த வள்ளுவன் எக்கல்லூரியில் படித்தான்?

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவின் கலாசாலைப் பட்டம் யாது—? நம் கல்வி மந்திரி அடிக்கடி கூறும் கம்பன் எப்பட்டம் பெற்றவன்—? கம்பனை, "கல்வியிற் பெரியவன் கம்பன்" என இலக்கணப் புத்தகங்களிலும் எழுதி வைத்திருகின்றனரோ?

இதிலிருந்தாவது அறிவு, பள்ளிப் பாடத்தால் மட்டும் கிடைப்பதல்ல, என விளங்குகிறதல்லவா? நம் பிரதமரின் கல்விப் பட்டம் யாது? அவருடைய சொற்பொழிவுகளில் எவ்வளவு தத்துவ வார்த்தைகள் அடங்கியிருக்கின்றன. எனவே, கலாசாலைப் படிப்பு ஒன்றால்தான் அறிவு வளரும் என்றில்லையல்லவா?

அவ்வாறிருக்க ஆங்கிலம் கற்காத தமிழ் பண்டிதர்களுக்குப் பொது அறிவு இல்லை எனக் கூறி அவர்களை உயர் நிலை வகுப்புகளுக்குப் பாடம் எடுக்க விடுவதில்லை. வித்வான் படித்த ஒருவன் விகடராமன் குதிரை ஏறிப்போன கதையைச் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏன், அவர்கள் நாலு, ஐந்து, ஆறும் பாரங்களுக்குப் பாடம் கற்பிக்கக் கூடாது? இதுகாறும் அவர்களிடம் கற்ற மாணவர்கள் பொது அறிவற்றவர்களாக, கிணற்றுத் தவளைகளாக ஆகிவிட்டார்களா? ஒரே தகுதிபெற்ற வித்வான்களுக்குள்ளுமா ஊதியத்தில பிரிவினைகள்!

இரட்டை ஆட்சி இச்சகப் பேச்சு ஆங்கில ஆட்சியுடன் அகலவில்லை. தமிழ் பண்டிதர்கள் அழும் கண்ணீர் வீண்போகாது என நம்புகிறோம். தமிழ் நாடே! நீ முன்னேறுவையோ! தமிழ் மொழியே! உன்னைக் கற்ற பண்டிதர்கள் படும்பாட்டை உன் சொற்களால் கூட வருணிக்க முடியாதே.

நம் அரசாங்கம் கவனிக்குமாக! பண்டிதர்களுக்குள் இருக்கும் பிரிவினையை நீக்குமாக! ஊதியத்தை உயர்த்துமாக!

தமிழகத்தைச் சீரழிக்க கம்யூனிஸ்டுகள் உடந்தை!

ம. பொ. சி.

ஆந்திர மாகாணப் பிரிவினைபற்றி தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டு கட்சியும், ஆந்திரக் கம்யூனிஸ்டு கட்சியும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன. இந்த அறிக்கையின் சுருக்கம், 'இந்து,' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. முழு அறிக்கையும் (19-11-47) 'ஜனசக்தி'யில் வெளிவந்துள்ளது.

இந்த அறிக்கை வெளி வரப்போவதை நாம் முன் கூட்டியே அறிவோம். என்றாலும், அறிக்கை எதிர் பார்த்தபடி இல்லை; அறிக்கையில், தமிழ்நாட்டு கம்யூனிஸ்டு தலைவர், ஜமீன்தாரர்களால் நடத்தப்பட்டு வரும் ஆந்திர மகாசபை என்னென்ன அநீதியான கோரிக்கைகளை அறிவித்ததோ, தமிழர் மீது என்னென்ன அபாண்டமான குற்றச்சாட்டுகளை வெளியிட்டதோ, அவ்வளவையும் ஏற்றுக்கொண்டு விட்டார். ஆந்திரமகாசபை தனது கோரிக்கைகளை நேரடியாக வெளியிட்டது; இன உணர்ச்சியின் பெயரால் அவற்றிற்கு ஆந்திரரிடையே மட்டும் ஆதரவு தேடியது.

ஆனால், கம்யூனிஸ்டு தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஆந்திர மகாசபையின் கோரிக்கைகளுக்குச் சுற்றி வளைத்து ஆதரவு காட்டுவதுடன், வர்க்க உணர்ச்சியின் பெயரால் ஆந்திரரின் அநீதியான நலன்களுக்குத் தமிழரிடையேயும் ஆதரவு தேடுகிறது. இனி அறிக்கைக்கு வருவோம்:—

தமிழர் மீது பழி சுமத்தும் படலம்

ஸ்ரீ ஜத் பிரகாசமும்—ஸ்ரீ ஜத் ரங்காவும் ஆந்திர மாகாணத்தில் சென்னையும், சென்

ளைக்கு வடக்கேயுள்ள செங்கல்பட்டு ஜில்லா பிரதேசமும் சேர்ந்தது என்று வற்புறுத்துகின்றனர்.

மற்றொரு பக்கத்தில், ஸ்ரீஜத். காமராஜ நாடாரும், ஸ்ரீஜத். சிவஞான கிராமணியாரும் திருப்பதி வரையிலுமுள்ள சித்தூர், நெல்லூர் ஜில்லாக்களின் பகுதிகளும் தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்ற அநீதியான கோரிக்கைகளை வலியுறுத்துகின்றனர்.

என்று கூறுகிறது கம்யூனிஸ்டுகளின் அறிக்கை.

ஆந்திரத் தலைவர்களை 'வற்புறுத்துகின்றனர்' என்ற அளவோடு குறிப்பிட்டவர்கள், தமிழரைப்பற்றி கூறும்போது 'அநீதியான' கோரிக்கைகளை வலியுறுத்துகின்றனர் என்று கூறி ஆந்திரர்களின் நீதியை நமக்கு நினைப்பூட்டுகின்றனர்.

இதில் மற்றொரு கலப்பற்ற பொய் என்னவென்றால், 'காமராஜ நாடாரும் சிவஞான கிராமணியாரும் நெல்லூரின் பகுதிகளைக் கேட்கிறார்கள்' என்பதாகும்.

என்னைப் பொறுத்த வரையில் நெல்லூரைப்பற்றி நான் நினைத்ததே கிடையாது. ஒரு சகோதரக் கட்சியைச் சேர்ந்த பொதுஜன ஊழியன் மீது இவ்வளவு அபாண்டமான பழியைச் சுமத்தும் அளவுக்குச் செல்லும் பொதுவுடைமைக் கட்சியின் போக்கு நமக்குப் புரியவேயில்லை. சித்தூரின் பகுதிகளைக் கேட்பதில் அநீதியில்லை என அவர்கள் நெஞ்சே அவர்களுக்கு வலியுறுத்தியிருக்க வேண்டும். ஆகவே, எனது கோரிக்கையை 'அநீதி' என்று கூறுவதற்காக நான் நெல்லூரையும் கேட்பதாகப் பழிசுமத்தினர் போலும்!

சென்னையும், செங்கல்பட்டு பிரதேசம் மட்டுமல்லாமல் வடாற்காடு, சேலம், தென்னாற்காடு ஆகிய ஜில்லாக்களின்

பிரதேசங்களும் ஆந்திர நாட்டோடு சேரவேண்டுமென்று அண்மையில், சென்னையில் கூடிய ஆந்திர மாகாணக் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. கம்யூனிஸ்டு தலைவர்கள் இதை மறந்தனர் போலும்!

பழி சுமத்தும் படலம் என்னோடு முடியவில்லை. தமிழ் இனத்தையும் இழுக்கிறது.

ஆந்திரர் சென்னை நகரைக் கேட்பது சரியல்ல என்பதை கம்யூனிஸ்டு தலைவர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால், ஆந்திரர்கள் அப்படிக் கேட்கத் துணிந்ததற்கும் இந்தத் தலைவர்கள் தமிழர்கள் மீதே பழி சுமத்துகின்றனர்.

> நகரிலுள்ள சிறுபான்மையோருக்கு அளிக்கப்படும் பாரபட்சமான நடத்தை சென்னை நகரம் தமிழ் மாகாணத்தில் சேர்ந்ததா என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு ஓர் அடிப்படைக் காரணமாய் இருந்தது.

> சென்னை அரசாங்கமும், சென்னை நகர கார்ப்பொரேஷனும் சென்னை கார்ப்பொரேஷன் பள்ளிகளில் தெலுங்கு போதனா பாஷையாக இருப்பதை ஒழித்து வரும் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

என்கின்றனர் கம்யூனிஸ்டுகள். ஆம், தங்கள் மொழிக்கு தீங்கு செய்ததற்காகத்தான், பட்டினத்தையே பறிமுதல் செய்ய நினைத்தார்களாம் ஆந்திரர்கள். இவ்வாறு ஆந்திரர்களிடம் பரிவு காட்டி, தமிழர்களை வன்மையாகக் கண்டிக்கின்றனர் கம்யூனிஸ்டுகள்.

கம்யூனிஸ்டுகள் கூறுவதுபோல், சென்னை நகரில் தெலுங்கை ஒழித்துக்கட்ட எந்தத் தமிழனும் திட்டமிட்டதில்லை. அதற்கு அரசாங்கத்தாரிடமும், நகராண்மைக் கழகத்தாரிடமும் ஆதரவும் பெற்றதில்லை, உண்மையைச் சொன்னால், சென்னை அரசாங்கத் தலைமையும், நகராண்மைக் கழக மேயர், கமிஷனர் பதவிகளும் பெருவாரியான சந்தர்ப்பங்களில் ஆந்திரர்களிடமே இருந்திருக்கின்றன. இதைக் கம்யூனிஸ்டு தலைவர்கள் அறியார் போலும்! எடுத்ததற்கெல்லாம் புள்ளி விவரத்துடன் வாதாடும் இவர்கள், தமிழர் மீது பழி சுமத்தும் இடத்தில் மட்டும் தக்க புள்ளி விவரங்களைக் காட்டாத காரணம் என்ன?

தமிழர்கள் என்றால் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று எதையும் சொல்லிவிடலாம் என்ற எண்ணம் போலும்! இதற்கு தமிழ் நாட்டு கம்யூனிஸ்டு கட்சியினரும் உடந்தையா யிருந்தது குறித்து 'வருந்துகிறோம்' என்பதைத் தவிர ஒரு சகோதர கட்சியை வன்மையாகக் கண்டிக்க நாம் விரும்பவில்லை.

சென்னையில், தெலுங்கர்களுக்கு இல்லாத குறையை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு, தமிழர் மீது அடாப் பழி சுமத்தி வன்மையாகக் கண்டிக்க முற்பட்ட இந்த மக்கள் தலைவர்கள், வடக்கே சித்தூர் ஜில்லாவில் தமிழ் அழிந்த வரலாற்றை—அரசாங்க ஸ்தல ஸ்தாபன வேலைகளில் ஆந்திரர்களே ஆதிக்கம் செலுத்தும் அநீதியை கண்டிக்காமல் விட்ட காரணம் என்ன? அங்குள்ள தமிழர்கள் மக்களாகப் படவில்லையா? அல்லது, ஆந்திரர்கள் மிக மிக நீதிவான்கள் என்று திருப்தி கொண்டு விட்டார்களா?

சித்தூரில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ் மொழி அழிக்கப்பட்டு, தமிழர்கள் அனைவரும் தெலுங்கு படிக்கும் கட்டாயத்தை உண்டாக்கி சித்தூர் ஜில்லாவின் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்தோடு அணைத்துக் கொள்ளும் அளவுக்

குத் தமிழரைத் தெலுங்கராக்கிய கொடுமையைக் கம்யூனிஸ்டு கள் அறிந்து கொள்ள விரும்பினல், அறிவிப்பதற்கு நான் சித்தமாக இருக்கின்றேன். என்னேடு சித்தூர் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யட்டும். அங்குள்ள மக்களைக் கொண்டே இந்த மக்கள் தலைவர்களுக்கு உண்மையை உணர்த்துகிறேன்.

சென்னையில் தெலுங்கு ஒழிக்கப்பட்டு விட்டதாக கற்பனை செய்து கொண்டு வன்மையாகக் கண்டிக்கும் ஆந்திர கம்யூனிஸ்டு தலைவர்களின் ஆத்திர உணர்ச்சியை ஆமோதித்த தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர் திரு. வேங்கடராமன் சித்தூரில் தமிழ் அழிக்கப்பட்ட கொடுமையைச் சேர்த்துக் கண்டிக்கத் தவறிவிட்டது எதற்காக? ஆந்திர கம்யூனிஸ்டு களுக்கு இருக்கும் அளவுக்கு தாய் மொழிப்பற்று தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு இல்லையா? அல்லது பரந்த மனப்பான்மையில் மறந்து விட்டார்களா? அதுவுமில்லையேல், ஆந்திர கம்யூனிஸ்டுகள் தயாரித்த அறிக்கையில் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர் அவசரமாகக் கையொப்ப மிட்டு விட்டாரா?

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்: தயவு செய்து தமிழ் நாட்டின் வரலாற்றை, தமிழ் இன உணர்ச்சி உடையார் எழுதிய ஏடுகளிலே ஆராய்ந்து பாருங்கள். வந்த எந்தப் பிறமொழிக்கும் வாழ் வளித்தவர் தமிழர்; பரதேசி என்று வந்தவர்களை எல்லாம் பரிவுடனே வரவேற்று பங்கும் தந்தவர் தமிழர். அத்தகைய வர் தெலுங்கு மொழியை அழித்தனர் என்பது அநீதி யல்லவா? தமிழினத்தின் வாழ்வையே சீர்குலைத்த வட மொழிக்கு வாழ்வளித்த தமிழர், தமிழிலிருந்து கிளைத்த தெலுங்கை அழித்தனர் என்று பழி கூறுவது மறக்கமுடியாத மனவேதனை தருவதாகும்.

மார்க்ஸீயப் பாதையை மறந்தனரோ!

> "சித்தூர் ஜில்லா உள்பட திருப்பதி வரையில் தங்கள் எல்லை உண்டு என்று தமிழர்கள் கூறும் வாதத்திற்கு ஆதாரமேயில்லை.
>
> ....சித்தூர் ஜில்லாவிலுள்ள எந்தத் தாலுக்காவிலும் எந்தக் காலத்திலும் தமிழர்கள் பெரும்பான்மையோராக இருந்ததில்லை.
>
> ....திருத்தணி தாலுக்காவின் சில பிர்க்காக்களிலும், புத்தூர் தாலுக்காவில் சில கிராமங்களிலும் தமிழர்கள் பெருந் தொகையில் வாழ்கிறார்கள்"

இதுதான் தமிழகத்தின் வடக்கெல்லை பற்றிக் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்து என அறிக்கை கூறுகிறது. இதற்கு ஆதாரமாக சித்தூர் ஜில்லாவில் திருப்பதிவரை உள்ள தாலுக்காக்களின் 1894-ம் ஆண்டு ஜனத்தொகையை எடுத்துக் காட்டுகின்றது.

கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தெலுங்கு பேசுவோர் எல்லோரும் ஆந்திர இனத்தவர் என்று ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லை யென்றால், "ஆந்திரர்" என்ற தலைப்பில் அவர்கள் கொடுக்கும் கணக்கிலிருந்து, பண்பாட்டில் தமிழரோடு கலந்து வெறும் பேச்சில் மட்டும் திருத்தமற்ற தெலுங்கு பேசும் தெலுங்கர்களை யெல்லாம் பிரித்துப் பார்க்கட்டும். அப்போது ஆந்திரர்களின் எண்ணிக்கை தமிழர்களின் எண்ணிக்கையை விட மிக மிகக் குறைந்திருப்பதைக் காண்பார்கள். சித்தூர் ஜில்லாவில் திருப்பதி வரை உள்ள தாலுக்காக்கள் தமிழருடையதா? அல்லது ஆந்திரருடையதா? என்று

தீர்ப்பளிக்கும் சக்தி ஆந்திரர்களிடமிருந்து பலவற்றுலும் வேறுபட்டுள்ள தெலுங்கரிடமே இருக்கிறது. அந்தத் தெலுங்கரின் மனதறியத்தான் சித்தூர் ஜில்லாவில் தமிழரசுக் கழகத்தார் ஜனநாயக வழியில் பிரசாரம் செய்கின்றனர்.

'பண்பாட்டிலும் பழக்க வழக்கத்திலும் மனப்பான்மையிலும் தமிழரோடு ஒத்திருந்தாலும், சித்தூர் ஜில்லாவிலுள்ள ரெட்டியார், நாயுடு போன்ற தெலுங்கரெல்லாம் ஆந்திர இனத்தவரே என்று சாதிப்பதாயின், அதற்கு நாம் பதில் கூறத் தேவையில்லை. இதோ மார்க்ஸீயப் பாதையில், ஸ்டாலின் காட்டும் விளக்கொளியால், ஒரு இனத்துக்குரிய இலக்கணம் இன்னதென நாம் கண்டதை, ஆந்திர—தமிழக கம்யூனிஸ்டுகள் நமக்கு முன்னே தெளிவுறக் கண்டிருந்தும் மறந்ததை, அல்லது மறைத்ததைக் காட்டுகிறேம். காணட்டும்:

> பேசும் மொழி, வாழும் தாயகம், தொன்று தொட்டுத் தொடர்ந்துவரும் வரலாறு, தனக்கே உரிய பண்பாடு, ஆகியவற்றில் தனித்தியங்கும் சமூகமே ஒரு தேசிய இனம் எனப்படும்.

இது தோழர் ஸ்டாலின் கூறும் அறிவுரை மட்டுமல்ல. நமது அனுபவமும் கூட. இதன்படிப் பார்த்தால், சித்தூரில் வாழும் தெலுங்கர்கள் எந்த வகையிலும் ஆந்திர இனத்தவராக மாட்டார்கள். மொழியைப் பொறுத்தவரையில் அவர்கள் பேசும் தெலுங்கு திருத்தமான தெலுங்கல்ல. மற்றும் அவர்கள் ஓரளவு தெலுங்கு பேசுவது போலவே தமிழையும் நன்ருக பேசுகின்றனர். ஆம்; தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளையுமே அவர்கள் தமது அன்ருட வாழ்க்கையில் பேசி வருகின்றனர்.

உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் சித்தூர் ஜில்லா தெலுங்கர்கள் ஆந்திர பண்பாட்டைவிட தமிழ்ப் பண்பாட்டையே அதிகமாகக் கடைப்பிடிக்கின்றனர்.

வரலாற்றை உத்தேசிக்கும் பொழுதும் எத்தனையோ நூற்றுண்டுகளாக அவர்களது வாழ்க்கை தமிழ் நாட்டின் வரலாற்ருேடேயே பிணைக்கப்பட்டு கிடக்கிறதென்பதை கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அறிந்தே இருக்க வேண்டும்.

வாழும் தாயகத்தை நோக்குங்கால், தமிழ் நாட்டின் பிற ஜில்லாக்களிலுள்ள தெலுங்கரைப் போன்றே, சித்தூர் ஜில்லாவிலுள்ள தெலுங்கரும் வரலாற்று வழிப்பட்ட வேங்கடத்தை வடக்கெல்லையாகக் கொண்ட தமிழகத்தையே தாயகமாகக் கொண்டிருக்கின்றனர்.

இவை அனைத்தும் இருப்பினும், சித்தூர் ஜில்லா தெலுங்கர்கள் மனப்பான்மையையும் அறிய வேண்டும் என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் வற்புறுத்துவாராயின், அதை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். அதை அறிவதற்காக எல்லைக்கமிஷன் அமைப்பதையும் ஆதரிக்கிறோம். ஆனால், இன்று சித்தூர் ஜில்லாவில் எல்லாத் துறைகளிலும் ஆந்திரர்களே ஆதிக்கம் செலுத்தி வருவதால் எல்லைப் பிரச்சினையைப் பற்றி அங்கு ஒரு தலைப்பட்சமான பிரசாரம் நடைபெற்று வருகிறது. இன்று நேற்றல்ல; சுமார் 40 ஆண்டுகளாக. எனவே, எல்லைக் கமிஷன் வருவதற்கு முன்பு சித்தூர் ஜில்லாவில் சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் தமிழர் தங்கள் கட்சியை எடுத்துக் கூறியாக வேண்டும் என்பதே தமிழரசுக் கட்சியாரின் கருத்து. அதுவும் அமைதியும், அன்பும் நிறைந்த முறையிலேயே அன்றி, பதினாயிரத்திற்கு மேற்பட்ட ஆந்திரர் படையெடுத்து சென்னை நகர வீதிகளில் சகோதரத் தமிழர்களைப் பார்த்து 'சலோ மதராஸ்' (சென்னையைவிட்டு வெளியேறு) என்று வெறிபிடித்துக் கூவினார்களே, அம்மாதிரி பயமுறுத்தல் முறைகளினால் அல்ல. வடக்கெல்லையில் நமது பிரசாரத்தில்

அமைதிக்கு மாறுபட்ட முறைகள் கையாளப்படுவதாக கம்யூனிஸ்டுகள் நினைத்தால் அவை இன்னதென எடுத்துக் கூறட்டும். உண்மையாயின், திருத்திக் கொள்ள சித்தமாயிருக்கிறோம். மொழிவழி நாடுகள் பிரிந்த பிறகும் ஆந்திரர் போன்ற பிற தேசீய இனங்களோடு உறவு கொண்டு ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஊறு விளைவிக்கும் எந்தச் செயலையும் தமிழரோ, அல்லது தமிழரசுக் கட்சியினரோ இதுவரை செய்ததில்லை, இனியும் செய்யப்போவதில்லை.

வம்புக்கு வக்காலத்து!

சென்னையில் கூடிய ஆந்திர மகாசபை, ஆந்திர மாகாண காங்கிரஸ் ஆகியவற்றில் சேலம், வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய ஜில்லாக்களின் பகுதிகளிலும் ஆந்திரர்களுக்குப் பங்கு உண்டு என்று தீர்மானித்தார்களல்லவா? அந்த வம்பான கோரிக்கைக்கும் கம்யூனிஸ்டுகளின் அறிக்கை ஆதரவு காட்டுகிறது.

> எல்லையை நிர்ணயிக்கும் பொருட்டு, எல்லைக் கமிஷன் சித்தூர், வட ஆற்காடு சேலம், செங்கல்பட்டு ஜில்லாக்களின் எல்லைப் பிரதேசங்களைச் சுற்றிப்பார்வையிட வேண்டும். எங்கு எல்லைக்கமிஷன் எல்லைகளைத் தீர்க்க வழிகாண முடியவில்லையோ, அப்பிரதேசங்களின் மக்களின் ஜனநாயகமான அபிப்பிராயத்தின் அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

என்கிறது கம்யூனிஸ்டுகளின் அறிக்கை. அந்த ஜில்லாக்களில் எங்கெல்லாம் ஆந்திரர்களுக்குச் சேரவேண்டிய பகுதிகள் இருக்கின்றன என்பதையும் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

செங்கல்பட்டு ஜில்லாவில் உள்ள மாதர்ப்பாக்கம் பிரதேசத்திலும், வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள குடியாத்தம் பகுதிகளிலும், சேலம் ஜில்லாவில் ஒசூர்தாலுக்காவிலும் பெரும் அளவுக்குத் தெலுங்கு பேசும் மக்கள் நிறைந்திருக்கிறார்கள்.

இந்த வாதத்திற்கு ஆதாரமாயிருப்பது அந்தத் தமிழ்ப் பிரதேசங்களெல்லாம் ஆந்திர நாட்டை ஒட்டியிருக்கின்றன என்பதேயாகும். கம்யூனிஸ்டுத் தோழர்களைக் கேட்கின்றோம்: அந்தப் பிரதேசங்களிலுள்ள தெலுங்கு பேசும் மக்கள் தங்களை ஆந்திரர்களென்றோ, தாங்கள் வசிக்கும் பகுதிகள் ஆந்திர நாட்டோடு சேரவேண்டுமென்றோ கிளர்ச்சி செய்தார்களா? நாமறிந்த வரையில், 'இல்லை' யென்பதே பதில். ஆந்திர பண மூட்டைகளும், பதவி வேட்டைக்காரர்களும் கிளப்பிய வம்பு வாதத்திற்கு கம்யூனிஸ்டுகள் வலியவந்து வக்காலத்து வாங்குவானேன்?

மற்றும், அந்தப் பகுதிகளில் வசிக்கும் தெலுங்கு பேசுவோர் எப்போதோ ஒரு காலத்தில் குடியேறி, விநாடிக்கு விநாடி தமிழ்ப் பண்பாட்டில் கலந்து தமிழரோடு தமிழராக இணைந்துவிட்டவரன்றோ! சிக்கலை ஜனநாயக முறையில் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு ஆதிக்கவாதிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சிக்கலை அதிகப்படுத்த முயல்வது முற்போக்குக் கட்சிக்கு அழகல்ல.

கொள்ளைக்கு ஆதரவு!

'சென்னை தமிழருக்கே உரியது' என்ற நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள் அதே மூச்சில் ஆந்திர ஆதிக்கவாதிகளின் பேராசையை நிறைவேற்றவும் திட்டம் தருகின்றனர்.

> சென்னை, தமிழகத்துக்கே சந்தேகத்திற்கிடமில்லாமல் சொந்தமானதென்று நாம் ஒப்புக்கொள்ளும்போது, சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளும் பிரச்னையில் சரியான கவனம் செலுத்தவேண்டி யிருக்கின்றது.... சென்னை மாகாணத்தின் ஆஸ்தியைக் கணக்கெடுத்து நியாயமான முறையில் பங்கிட வேண்டும். குறைந்த அளவில் அபிவிருத்தி அடைந்திருக்கும் ஆந்திர மாகாணம் விரைவில் தமிழ் நாட்டின் அளவுக்கு வளர உதவும் வகையில் ஈடுசெய்யும் சொத்துக்கள் கூட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

என்கின்றனர் கம்யூனிஸ்டுகள்.

சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டியது நியாயமென்பதை ஒப்புக்கொள்ளுமிடத்து, "தமிழ் நாட்டின் அளவுக்கு வளர உதவும் வகையில் ஆந்திர நாட்டிற்குக் கூட்டிக் கொடுக்கவேண்டும்" என்ற வாதம் எந்த நியாயத்தை ஒட்டியதோ? அதே மாதிரி தமிழ் நாட்டின் அளவுக்கு வளர உதவும் வகையில் கன்னடத்திற்கும், கேரளத்திற்கும்கூட தமிழ்நாடு தாராள மனதுடன் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்பதையும் அறிக்கை ஆமோதிக்கிறது. இதைத் தமிழர் ஏற்றுக் கொள்வராயின் தமிழகத்தின் கதி அதோகதிதான்.

பம்பாயிலிருந்து சிந்து மாகாணமும், பஞ்சாபிலிருந்து எல்லைப்புற மாகாணமும் முன்னர் பிரிக்கப்பட்டபோது, இவர்கள் சொல்லுவது போல சொத்துக்கள் கூட்டிக் கொடுக்கப்படவில்லை. அப்படியிருக்க, தமிழருக்கு மட்டும் உபதேசம் செய்ய முற்படுவானேன்? ஒருவேளை மாகாணங்களிடையே சொத்தைப் 'பொதுவுடைமையாக்கி மார்க்ஸீய முறையைப் பரீட்சிக்கின்றனர் போலும்! அப்படியானால், வட

நாட்டுக்கும் தென்னாட்டுக்குமிடையே இதே முறையை கையாளுவார்களா?

முன்னுக்குப்பின் முரணான வாதம்

சென்னையை ஆந்திரர், கேரளர். கன்னடர் ஆகிய எல்லா இனத்தவருக்கும் உரிய பொது நகரமாக ஆக்கவேண்டுமென்று வெளிவந்த பி. என். ராவ் திட்டத்தைக் கம்யூனிஸ்டு அறிக்கை அழுத்தமாகக் கண்டிக்கிறது. ஆனால், அதே அறிக்கை மற்றோர் இடத்தில் பின்வருமாறு கூறுகிறது:

> "புதிதாக ஏற்படும் ஆந்திர மாகாணம் தனக்கென்று ஒரு தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டு, தன் சுயபலத்தால் நிமிர்ந்து நிற்கும் காலம்வரை தற்காலிகமாக அதற்குச் சென்னையிலேயே வேண்டிய சௌகரியங்களும் ஏற்பாடுகளும் செய்து தருவது அவசியம்."

இதைத் தெளிவாகத் தெரிவித்தால், பிரிக்கப்பட்ட ஆந்திர நாடு இஷ்டப்படும்வரை சென்னையையே தலைநகராகக் கொள்ள இடந்தர வேண்டும் என்பதே ஆகும். பி. என். ராவ் திட்டம் சென்னையில் ஆந்திரருக்கு இடந்தர வேண்டும் என்று உத்தரவிடுகின்றது. கம்யூனிஸ்டுகளின் அறிக்கை 'உபதேசம்' செய்கிறது. இரண்டிலும் கருத்து ஒன்றுதான்.

ஆந்திர-தமிழ் கம்யூனிஸ்டுகளின் அறிக்கை, இனஉணர்ச்சியின்பேரில் எழுப்பிய ஆந்திர ஆதிக்கவாதிகளின் கோரிக்கைக்கு, வர்க்க உணர்ச்சியின் பெயரால் தமிழ்ப் பாட்டாளி மக்களிடையே ஆதரவுதேட புறப்பட்டதேயாகும்.

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர் திரு. வேங்கடராமன் அவர்கள், யாது காரணத்தாலோ தமிழினத்தின்

உரிமைகளை ஆந்திரர்களுக்கு விட்டுக்கொடுக்கத் துணிந்து விட்டார்.

ஆந்திர கம்யூனிஸ்டுகள் தயாரித்து, தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் ஆமோதிப்புடன் வெளிவந்துள்ள அறிக்கையை தமிழர் ஏற்பதாயின், அதனால் ஆந்திரருக் கேற்படும் வாழ்வும், தமிழருக்கு நேரும் கேடும் பின்வருமாறு:

ஆந்திரருக்கு வாழ்வு

- இரண்டொரு கிராமங்கள் தவிர, சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் நிலம் முழுவதும் ஆந்திரர்க்கே யாகும்.

- சேலம், செங்கல்பட்டு, வடஆற்காடு ஆகிய ஜில்லாக்களிலிருந்து பல ஆயிரம் சதுர மைல்கள் கொண்ட நிலங்கள் பிரிக்கப்பட்டு ஆந்திர நாட்டோடு சேர்க்கப்படும்.

- தங்கள் நாட்டில் ஒரு சரியான தலைநகரை நிர்மாணித்து விட்டதாகத் திருப்தி ஏற்படும்வரை ஆந்திரர்களுக்குச் சென்னை மீது ஆதிக்கம் இருந்துவரும்.

- சென்னை அரசாங்க சொத்தில் நியாயமான கணக்குப்படி அல்லாமல், தமிழ் நாட்டோடு சரிநிகர் சமானமாக நிமிர்ந்து நிற்கும் அளவுக்கு சொத்துக்கள் கூட்டிக் கொடுக்கப் படும்.

தமிழருக்கு வரும் கேடுகள்

- கம்யூனிஸ்டுகளின் அறிக்கை கன்னட, கேரள மாகாணங்களின் பிரிவினைகளைப் பற்றி ஒன்றும் கூருமல் விட்டதால், அந்த இரண்டு பிரதேசங்களும் தனி மாகாணங்களாவதற்குத் தகுதி பெறும்வரை தமிழர் தலைமீது சுமத்தப்படலாம்.

- ஆந்திரருக்கு சொத்துக்களைக் கூட்டிக் கொடுப்பதாலும், அதே மாதிரி பின்னொரு காலத்தில் கேரளருக்கும், கன்னடருக்கும் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்பதை ஏற்பதாலும் தமிழகத்தின் வளம் பறிபோகும். தமிழர் வாழ்வு தாழ்வுறும். கடன் சுமை ஏறி நிற்கும்.

- சென்னை நகரம் தமிழ் நாட்டோடு சேரும். ஆனல், ஆந்திரர், கேரளர், கன்னடர் பிடியிலிருந்து விடுபட்டு சென்னை நகரம் **தமிழ**ருக்கே ஆக பலகாலம் பிடிக்கும். அந்தக் காலத்தை நிச்சயிக்கவும் முடியாது.

- சித்தூர் ஜில்லாவில் சில கிராமங்கள் தமிழருக்குக் கிடைக்கலாம். என்ருலும், தமிழகத்தின் வடக்கெல்லை பறிபோவது திண்ணம்.

- பொதுவாக தமிழர் இழப்பது மலையளவு. பெறுவது சிறு கல்லளவு. அதுவும் உரிய

தைப் பெறுகிறோமே யொழிய உபரியாக அல்ல. இதுதான் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் தமிழ் நாட்டுக்குச் செய்யும் "நன்மை" போலும் !

கம்யூனிஸ்டுகள் தங்களது முடிவு தவறென்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டால், முன்செய்த முடிவிலிருந்து பின் வாங்குவதற்குச் சற்றும் தயங்கமாட்டார்களென்று நம்புகிறோம். இதற்கு அவர்கள் அரசியல் வாழ்வில் எத்தனையோ சான்றுகள் உண்டு. அதேபோல், இப்போதும் அவர்கள் இந்த அறிக்கை மூலம் தமிழினத்திற்குத் தீங்கிழைப்பதிலிருந்து திருந்திக் கொள்ளுவார்களென்று நம்பி, இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறோம்.

அறிவிப்பு

தலைவர் ம. பொ. சி. அவர்கள், குடல்புண் அதிகப்பட்டதன் காரணமாக, வயிற்று வலியால் வருந்துகிறார். ஓய்வுக்காக வெளியூர் சென்றிருக்கிறார். இன்னும் ஒரு மாத காலத்திற்கு எந்தக் கூட்டத்திலும் பேசுவதற்கில்லை. தயவு செய்து, அவரைக் கூட்டங்களுக்கு அழைக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இனி, தமிழரசுக் கழக சம்பந்தமாய் கடிதம் எழுதுவோர், செயலாளருக்கே எழுதக் கோருகிறேன்.

ஷ. சண்முகம்,
துணைச் செயலாளர்,
தமிழரசுக் கழகம்,
சென்னை.

அவரு இவன்?

மு. வரதராசன்

பழங் காலத்தில் தமிழன் பொருள் தேட வட நாட்டிற்குச் சென்று வந்தான். பிறர் வறுமையால் வாடுவதைக் கண்டு மனம் பொறுக்காமல் வட நாட்டிற்குப் போய் வாணிகம் செய்து செல்வம் சேர்த்துக்கொண்டு தமிழ் நாட்டிற்குத் திரும்பிவந்தான். இக்காலத்தில் தமிழன் தன் நாட்டிலேயே வாணிகம் செய்து செல்வம் சேர்ப்பதற்கும் வழியற்றவனாய் இருக்கின்றான். வட நாட்டார் இங்கே வந்து பலவகை வாணிகமும் செய்து செல்வம் சேர்த்துக்கொண்டு செல்வதைக் காண்கின்றான். நாளுக்கு நாள் தன் நாட்டில் வறுமை மிகுவதையும் கண்ணால் கண்டு கைகட்டி நிற்கின்றான்.

அந்தக் காலத்திலும் தமிழ்நாட்டில் வெளி நாட்டார் கலந்து வாழ்ந்திருந்தார்கள். மேற்கு நாட்டு யவனர்கள் தமிழ் நகரங்களில் வாழ்ந்திருந்தார்கள். வட நாட்டு மக்களும் தமிழ் நகரங்களில் தங்கியிருந்தார்கள். ஆனால், அவர்கள் தமிழ் நாட்டின்மேல் ஆணை செலுத்தி ஆட்சி புரிய வந்து தங்கி யிருக்கவில்லை; தமிழ் வேந்தர்களுக்கு அடங்கிப் பணி செய்யவே வந்திருந்தார்கள். மதுரை முதலிய நகரங்களில் காவல் காத்துத் தொழில் செய்தார்கள். இந்தக் காலத்திலோ வெளி நாட்டார் இங்கே தங்கி யிருப்பது ஆட்சி புரிய, ஆணை செலுத்த, பத்திரிகை நடத்த, பதவி கொள்ள.

அந்த நாளில் தமிழன் கொடி இமய மலை மீதும் நாட்டப்பட்டது. தமிழன் வட நாட்டு மலைக் கணவாய்களுக்கும் (சோழர் கணவாய் முதலியவை) வட நாட்டு ஊர்களுக்கும் (தமிழுக், நெல்லூர் முதலியவை) தன் தமிழ் மொழியால் பெயர் வைத்தான். வட நாட்டுத் தொடர்பான பெயர்களைத் தாங்கியபோதும் (கங்கை கொண்ட சோழன் முதலியவை) தான் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவே தாங்கி

னான். இந்த நாளில் தன் நாட்டில் தன் ஊர்களுக்கும், உணவு விடுதிகளுக்கும் தமிழ்ப் பெயர் வைக்கத் தயங்குகின்றான். தமிழ்ச்சுவையோடு செய்யும் தின்பண்டங்களுக்கும் வட நாட்டுப் பெயர்களை வைக்கின்றான். தமிழை வளர்க்கும் தாய்மைச் சிறப்புடைய பெண்களையும் 'அம்மா' என்று பெயரோடு சேர்த்து அழைக்கக் கூடி 'பாய்' 'பாய்' என்கின்றான்.

அன்றும் தமிழன் பிற நாட்டு மொழிகளைக் கற்றது உண்டு. அன்பால் பிற நாட்டு மக்களுக்குத் தன் கலை யறிவை உணர்த்தவும், பிற மொழிக் கலைகளை ஆராயவுமே அன்று பிற மொழி கற்றான். ஆனால், இன்று வட நாட்டார் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பிற மொழியைக் கற்கின்றான்; அடிமைப்பட்டு அன்பின்றிக் கற்கின்றான்; கலையார்வ மில்லாமல் வேறுவழி இல்லையே என்று கற்கின்றான்.

அந்நாளில் தான் ஒருவன் கெட்டாலும் தமிழினம் வாழவேண்டும் என்று ஒற்றுமை யுணர்ச்சி கொண்டிருந்தான்; வீரத்தோடு விளங்கினான். இந்நாளில் தமிழினம் கெட்டாலும் தான் வாழவேண்டும் என்ற தன்னலம் மிகுந்தவனாக இருக்கின்றான். தன் இனத்தைக் காட்டிக்கொடுத்துப் புகழும் பதவியும் பெறுகின்றான். தனித்தனியே மானமும், வீரமும் வாயால் பேசிப் பலவகையாய்ப் பிரிந்து பிளவுபட்டுச் சிதறுண்டு கிடக்கின்றான். 'துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே' என்று தமிழனுடைய உறுதியையும் ஒற்றுமை யுணர்ச்சியையும் சிறப்பித்த நாள் போய்விட்டது; 'தமிழர் கூட்டமாவது, தமிழர் ஒன்றுபடுவதாவது, நெல்லிக்காய் மூட்டை தானே, ஒன்றே கொள்கையானாலும் நூறு வகையாய்ப் பிரிவார்கள்' என்று பகைவர் பெருமை கொள்ளும் நிலைமையே வந்துவிட்டது.

அந்த நாளில் தன் வாழ்வை ஒருவரும் கெடுக்க முடியாது என்னும் தன்னம்பிக்கையோடு தமிழன் வாழ்ந்தான்; ஆகையால் ஒப்புரவைப் போற்றினான்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று முரசு கொட்டினான். இந்த நாளில் தன் வாழ்வை எல்லாரும் கெடுப்பதை உணர்கின்றான்; தன்னம்பிக்கை இழந்து பிறர் உதவியை நாடுகின்

றான்; ஆகையால் வேறு கதியின்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மெல்லச் சொல்லுகின்றான்.

அன்று, வட நாட்டில் பாரதப் போர் நடந்தபோதும் பெருஞ் சோறு அளித்து உதவிக் கலங்காமல் இருந்தான். எத்தனையோ அரசுகள் மாறி மாறி எத்தனையோ போர்கள் நிகழ்ந்து நிகழ்ந்து எவ்வளவோ குழப்பங்கள் வட நாட்டில் ஏற்பட்டபோதெல்லாம், தன் நிலையில் தளராமல் இருந்து முடிந்தவரையில் உதவி வந்தான். இன்று வட நாட்டில் நடக்கும் சிறு சிறு தொல்லைகளும் தன்னை வந்து தாக்க இடங்கொடுத்து, அந்தச் சுமைகளைத் தாங்கித் தாங்கி மெலிந்து போகின்றான்.

அந்நாளில் பிற நாட்டார்க்கு எல்லாம் உணவும் உடையும் உதவி இறுமாந்திருந்தான். ஆயினும் தன்னால் எளிய வாழ்வு வாழ முடியும் என்று வாழ்ந்து காட்டினான். 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று சொல்லிப் பெருமையுற்றான். இந்நாளில் பிற நாட்டாரிடம் உணவும் உடையும் இரந்து பார்க்கின்றான். அவர்கள் உதவி மறுத்த பிறகு எளிய வாழ்க்கையில் நிற்கின்றான். அவர்களெல்லாம் பதினெட்டு அவுன்ஸ் கோதுமையும், பதினாறுகெஜத் துணியும் பங்கீடாகப் பெறுவதைப் பார்த்தும், தான் மட்டும் எட்டு அவுன்ஸ் அரிசியும் ஐந்து கெஜத் துணியும் பங்கீடாகப் பெற்று நன்றி கூறி நிற்கின்றான்.

அந்த நாள் அவன் தமிழ் நகரங்களில் தலைநிமிர்ந்து நடந்த நாள். இந்த நாள் தமிழ் நகரத்தை பிறர் உரிமை கொண்டாடிக் கேட்கப் பொறுக்கும் நாள். அந்த நாள் காவிரிப்பூம் பட்டினமாகிய துறைமுகப் பட்டினத்தில் மூட்டைகளுக்குத் தமிழ் முத்திரையிட்டுக் கடைகளில் தமிழ்க் கொடியும் பண்டக் கொடியும் ஏற்றித் தமிழன் சடை வைத்து விற்ற நாள். இந்த நாள் தமிழன் தலை நகரமாகிய சென்னையில் காலால் நடக்கும் உரிமை மட்டும் பெற்றுக் கடைகள் எல்லாம் பிற நாட்டார் வைத்து விற்பதைக் காணும் நாள்; பெரிய கடைத் தெருக்களைப் பிறருக்கு விட்டு, மூலை முடுக்குகளில் சிறிய கடைகளில் விற்கும் உரிமையும் தெருவில் கூடை சுமந்து கூவி விற்கும் உரிமையும் மட்டும் தமிழன் பெற்றுள்ள நாள்; 'தமிழா, வெளியே போ' என்று தன் தலை நகரத்தில் பிறர் கொக்கரிப்பதையும் கேட்கும் நாள்.

அந்த நாளிலும் தமிழன் வாழ்ந்தான். இந்த நாளிலும் தமிழன் இருக்கின்றான். ஆனால், அவனா, இவன்?

வ. உ. சி. பெயரால் ஒன்றுபடுவோம்

ம. பொ. சி.

(24. 11. 47ல் சென்னை, பெரியமேட் வ. உ. சி. இளைஞர் மன்றத்தில் திரு ம. பொ. சி. பேசியதின் சுருக்கம்)

வ. உ. சி. விழா இந்த ஆண்டு எங்கும் கொண்டாடப் படுகிறது. இதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைவார் என்னை விட வேறு யாரும் இருக்கமுடியாது. ஆனால், எனது மகிழ்ச்சியிலே ஓரளவு வருத்தமும் கலந்திருக்கிறது.

விடுதலைப் போருக்கு வித்தூன்றிய வீரனின் திருநாளில் நாடாளும் அமைச்சர்களில் ஒருவரேனும் பங்கு கொள்ளவில்லை. நகரில் மட்டுமல்ல, வேறு ஊர்களிலேனும் அவர்கள் பங்கு கொண்டதாகச் செய்தி இல்லை. அழைக்காத காரணமா? இல்லை, இல்லை. அழைத்தும் வரவில்லை. அவகாசமில்லாததால் அல்ல; அலட்சிய புத்தி. மனமிருந்தால் மார்க்கமில்லாமலா போகும்?

வ. உ. சி. விழாவில் பல்வேறு அரசியல் கட்சியினரும் பங்கு கொண்டனர். இது மகிழ்ச்சிக்குரியதே.

வ. உ. சி. க்கு விழா நடத்துவது சமயச்சடங்கு போன்றதல்ல. வ. உ. சி. யைப் பாராட்டுவது — அவரது வரலாற்றை விரித்துரைப்பது—அவர் காட்டிய வழியில் சென்று மக்கள் கடமையைச் செய்யவேண்டும் எனத் தூண்டு வதற்கே யாகும்.

வ. உ. சி. சாதி வெறியர்களைச் சாடினார். பார்ப்பனர் களுடன் நட்பு கொண்டிருந்தாலும் பார்ப்பனீயத்தை

வெறுத்தார். அதன் கொடுமைகளை வாய் விட்டும் உரைத்தார்! அதில் வேறு எவருக்கும் அவர் சளைத்தவரல்ல. ஆனால், தேசிய பீடத்தில் நின்றுதான் — மொழி வழிபட்ட தமிழ் இனவுணர்ச்சியைக் கொண்டு தான் — ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொடி ஏந்தினான்—பார்ப்பனீய எதிர்ப்புப் பிரசாரம் செய்தார் என்பதை மறந்துவிடக் கூடாது.

வ. உ. சி. என்னும் விருட்சத்திற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பே வேர். தேசியமே அதன் அடிமரம். தமிழ்ப்பண்பாடுகளே அதன் கிளைகள். சாதி, சமய பேத மற்ற சமரச நெறிகளே அம்மரத்தின் இலைகள். ஆம். இவை அனைத்தும் கலந்தது தான் வ. உ. சி. எனவே, வ. உ. சி. யின் புகழ் வேறு, அவருடைய தேசியப் புரட்சி வேறு என்று பிரித்துக் கொண்டு, ஒன்றுக்கு ஒன்று முரண்படும் வகையில் பேசுவதும், எழுதுவதும் வ. உ. சி. யைப் போற்றுவதாகாது. வீரவணக்கம் செய்யும் நேரத்தில் வீண் வாதங்களைக் கிளப்புவது நல்லதல்ல.

வ. உ. சி. க்கு காந்தீயம் பிடிக்கவில்லை. என்றாலும் அவர் காந்தியடிகளைப் பழிக்கவில்லை. கருத்து வேற்றுமை கொள்வது அறிவுடையார் செயல்தான். ஆனால், அதற்காகப் பிறரைப் பழித்துப் பேசுவது அறிவுடைமையல்ல. இதை வ. உ. சி. நன்குணர்ந்தவர். பெரம்பூரில் காந்தியடிகள் வந்திருந்தபோது அவரது கூட்டத்தில் காலிகள் சிலர் கலகம் விளைவித்தனர். அக்காலையில் பெரம்பூரில் தங்கியிருந்த சிதம்பரனார் கலகத்தைக் கேள்வியுற்று, நண்பர்களுடன் விரைந்தோடிச் சென்று, கலகக்காரர்களை விரட்டியடித்து, காந்தியடிகளுக்குத் துணைசெய்தார். இதை என்

னிடம் கூறியவர் திரு. வி. க. ஆவர். ஆம். அறிவில் வேற்றுமை கண்டால், அது அன்பை அழித்துவிடாது என்பதை வ. உ. சி. தம் செயலில் காட்டினார்.

பாரதியார், சிதம்பரனார் சிறைபட்ட செய்தி கேட்டு "தண்ணீர் விட்டோ வளர்த்தோம்" என்ற கண்ணிகளைப் பாடினார். "கண்ணீரால் காத்த பயிர் கருகத் திருவுளமோ" என்றாரே, அந்தப் பயிர்தான் வ. உ. சி. "ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல வந்த மாமணியைத் தோற்போமோ!" என்றாரே, அந்த மாமணிதான் வ. உ. சி.

சுப்பிரமணிய சிவா தொழு நோய் பிடித்தவர். உடலிலுள்ள சதைகள் அழுகித் துண்டு துண்டாக விழுந்த போதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட வீரர் அவர். வ. உ. சி. சிறைமீண்டதும் அவரை, வா வென்றழைப்பார் யாருமில்லாதபோது 'அப்பா சிதம்பரம், வந்தாயா' என்று அன்புமொழி கூறியவர் சிவா. 'சிவா சிறையிலிருக்க நான் ஜாமீனில் வெளிவரேன்' என்று துணைவருக்குற்ற துன்பத்தைத் தனதாக ஏற்ற பெருமையும் வ. உ. சி. யின் தனி உரிமை.

"வ. உ. சி. சிறையில் செக்கிழுத்தால், இளஞ்சிங்கங்கள் சும்மாயிருக்குமோ ?" என்று துப்பாக்கி ஏந்தி, கலெக்டர் ஆஷைக் கொன்றவர் வாஞ்சி ஐயர், ஆம். வ. உ. சி. பார்ப்பனீயத்தின்மீது பகைகொண்டவர். ஆனால், பார்ப்பனீயம் விட்ட பார்ப்பனர்களை நண்பர்களாகக் கொண்டவர். இது அவரது வரலாறு.

சிதம்பரனார் காங்கிரசை விட்டு விலகினார். அவரை யாரும் விலக்கி வைக்கவில்லை, அவரே விலகினார். திலகர்

இறந்துவிடவே, காந்தியடிகள் தலைமை ஏற்றார். தலைமை மாறவே காங்கிரசில் திட்டமும் மாறியது. இது இயற்கை. வ. உ. சி. க்கு காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டம் பிடிக்கவில்லை. 'மகாத்மாவைப் பின்பற்றுவதா? மனச்சாட்சியைப் பின்பற்றுவதா?' என்ற பிரச்சினை அவர் முன் நின்றது. மகாத்மாவைவிட மனச்சாட்சியே பெரிதெனஎண்ணினார். எனவே, காங்கிரசிலிருந்து விலகினார்.

ஆம். மனச்சாட்சி வழி பணிபுரிய காங்கிரசை விட்டாரே யொழிய, மற்ற தலைவர்களிடம் கொண்ட பகைமையாலல்ல.

வ. உ. சி. மறைந்துவிட்டார். நாமக்கல் கவிஞர், 'குலவுபிள்ளை சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால், கொள்ளை கொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்' என்றார். ஆம்; சிதம்பரனாரை நினைத்தால் போதும், கொள்ளை கொள்ளை சிறையிருந்த குறிகளுடன் நம் கண்முன் தோன்றும் அவர் வடிவம்.

வ. உ. சி. யின் பெயரைச் சிலர் தங்கள் கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்துகின்றனர். ஆக்க வழியில் பயன்படுத்தினால் அதை ஆட்சேபிப்பாரில்லை. ஆனால், தங்கள் கட்சிக்கு மாறுபட்டவர்களை, அதுவும் இனஉணர்ச்சியுள்ள தமிழர்களையும் பழிப்பதற்காக வ. உ. சி. யின் பெயரைப பயன்படுத்துவது அவ்வீரரை இழிவு படுத்துவதாகும்

வ. உ. சி. யின் அரசியல் கொள்கைகளைப் பின்பற்றாதவர்கள், இனியும் பின்பற்றுவதில்லை யென்று முடிவுசெய்து கொண்டவர்கள் அவரது பேச்சுக்களிலுள்ள சொற்களைப்

பித்தெடுத்துத் தங்களுக்குச் சாதகமான வழியில் பிரசாரம் செய்வது அறிவுடைச் செயலல்ல; அரசியல் நெறியுமல்ல. அதுவும், இறந்துவிட்ட ஒருவரின் புகழை மாசு படுத்த முயல்வது மன்னிக்கமுடியாத குற்றம்.

உண்மையில், வ. உ. சி. யைப் பாராட்ட விரும்புவோர் அவர் செய்த வீரப் புரட்சிக்குத் தலை வணங்கட்டும். அந்த அற்புதச் செயல்களை நாடெங்கும் பரப்பி அவரது புகழை அழியாமல் காக்கட்டும். தங்கள் கட்சி வளர்ச்சிக்கு அவரது பெயரைப் பயன்படுத்துபவர்கள் அவரது புகழ்வளரத்தங்கள் கட்சியின் செல்வாக்கைப் பயன் படுத்தட்டும். ஊரெல்லாம் சின்னங்கள் எழுப்பி, சிலைகள் வைத்து, அவரைப்பற்றிய சிந்தனையைத் தமிழர் மனத்திலே புகுத்தட்டும்.

வ. உ. சி. வாழ்ந்த காலை தமிழ்நாடு அவரைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. வ. உ. சி. க்கு முன்னும் பின்னும் காங்கிரசிலிருந்து வேறு பல தலைவர்களும் விலகியதுண்டு. அவர்களேனும் வ. உ. சி. யின் தலைமையை ஏற்றுத் தமிழகத்தின் தனியுரிமைப் போரை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக காங்கிரசுக்கு வெளியே துவக்கியிருந்தால் ஆங்கிலேயர் வெளியேறிய அதே ஆகஸ்டு பதினைந்தில் தமிழகம் தனியரசு கண்டிருக்கும். ஆனால், அந்தத் தலைவர்கள் காங்கிரசை வெறுத்தது போலவே, வ. உ. சி. யின் தலைமையையும் எதிர்த்தனர். இப்போது "காங்கிரசிலிருந்து நான் வெளியேறினேன். அவர் வெளியேறினார். இவர் வெளியேறினார்" என்று ஓயாது கூறுகின்றனர். ஆனால் வெளியேறிய தலைவர்கள் ஏன் ஒன்றுபடவில்லை? ஒன்றுபடாதது மட்டுமல்ல; ஒருவரோடு ஒருவர் வம்புபேசி வசை கூறிக் கொண்டதையும் அவர்களே எழுதியுள்ள பழைய ஏடுகளில்

காணலாம். இவர்களது வசை மொழி அம்புகள் வ. உ. சி யையும் தாக்கியதுண்டு. அது கண்டு வ. உ. சி. மனம் நொந்துகூறிய மொழிகளை அவரே எழுதிய ஏடுகள் அறிவிக்கும். ஆம். தமிழகம் சீரழிந்ததற்கு அதன் தலைவர்களின் ஒற்றுமையின்மையும் ஒரு காரணம்தான். இதை நாம் மறந்து விடவில்லை. இவற்றை எல்லாம் ஏன் கூறுகிறேன்? தமிழகத்தை இன்னும் இன்னும் பிளவுபடுத்துகிறார்களே என்ற வேதனையால். முதியவர்களை வேண்டுகிறேன். பிளவுகளை நீக்கிக் கட்சிகளை ஒன்றுபடுத்துங்கள். இளைஞர்களின் கருத்துவழி திட்டத்தைக் காட்டித் தலைமை தாங்குங்கள். இயலாவிடில், பொறுப்பை இளைஞர்கள்மீது சுமத்தி ஒதுங்கி நில்லுங்கள்! வசைச் சொற்களும், வம்பு வாதங்களும், கடந்தகால வரலாற்றைத் திருத்திக் கூறுவதும் தமிழகத்தை வாழவைக்கும் வழிகளல்ல. தமிழகம் என்றென்றும் அழியாதது. அது உங்களுக்குப் பின்னும் நிலைத்திருக்கும். எனவே அதன் வாழ்வுக்கு வழிசெய்ய இளைஞர்களுக்கு வழிவிட்டு நில்லுங்கள்.

காங்கிரஸ் வாதிகளே! சிந்தியுங்கள். ஆதித் தலைவர்—தேசியத் தந்தை—புரட்சித் தளபதி வ. உ. சி. சென்ற இன உணர்ச்சிப் பாதையில் இருந்து இன்றையத் தமிழ் நாட்டின் தலைமை விலகிச் செல்கிறது. அதை இன வழிபடுத்தும் பொறுப்பு காங்கிரஸ் ஊழியர்களின் மீது சுமந்து நிற்கிறது. காங்கிரஸ் நேற்றுவரை போராட்ட ஸ்தாபனம். அன்னியன் வெளியேறியதோடு போராட்டம் முடிந்தது. காங்கிரசின் ஆக்க (நிர்மாண) வேலைத்திட்டங்களெல்லாம் அரசாங்கத் திட்டங்களாகி விட்டன. காங்கிரசும் ஒரு பார்லிமென்டரிக் கட்சியாக மாறிவிட்டது. இந்நிலையில், சாதாரண

காங்கிரஸ் ஊழியர்களுக்காகத் தமிழ் நாட்டுத் தலைமை என்ன திட்டம் தயாரிக்கப் போகிறது? இனி, தமிழ்நாட்டு காங்கிரசை எதிர்நோக்கி நிற்கும் ஒரே தேசியத் திட்டம் தமிழரசுத் திட்டமே யாகும். அதைத் தயாரிக்கவோ, வடநாட்டு ஆதிக்கத்திடமிருந்து தமிழ்நாட்டை விடுவிக்கவோ காங்கிரசின் அமைப்பு விதிகள் இடந்தரவில்லையானால், இதோ தமிழரசுக் கழகத்திடம் திட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றும் இயக்கமும் துவங்கி இருக்கிறது. அதில் பங்கு கொள்ளுமாறு ஒவ்வொரு காங்கிரஸ்காரரையும் அழைக்கின்றேன்.

தமிழ் மக்களே! வீர இளைஞர்களே! புறப்படுங்கள். வேங்கடம் சென்று உரிமையை நிலைநாட்டுவோம். தமிழ் நாட்டின் வளத்தைத் தமிழருக்கே ஆக்குவோம். இதில் கட்சிப் பூசல் வேண்டாம். விந்தியத்திற்கும் செல்லவேண்டுமா? அழைப்பு வந்தால் செல்லத்தயார். ஆனால், அழைப்பு வேங்கடத்துக்கு வெளியே யுள்ளவர்களிடமிருந்து வரவேண்டும். வேங்கடத்துக்கு வெளியே கைகாட்டிச் சின்னம் சாயவில்லை. சாயுமென்ற நம்பிக்கையுமில்லை. உரிமைக்காக இயக்கம்—போராட்டம்—என்றால் புரிகிறது. பிற இனங்களுடன் உறவுக்காகப் போராட்டம் அதுவும் தமிழர்களுள்ளேயே என்றால் நாடு சிரிக்கும். தமிழரின் தனி உரிமைப் போர் தமிழரசுப் போராகத்தான் இருக்க முடியும். அந்தப் போர் மூண்டு வருகிறது தியாகி வ. உ. சி. யின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழ் இளைஞர் படை திரள்கின்றனர். ஆற்றலுடையார் படையில் சேருங்கள். அன்புடையார் ஆசிகூறுங்கள். இரண்டுஞ் செய்ய மனமில்லாதவர் ஒதுங்கி நில்லுங்கள்! எதிர்ப்பு காட்டுவதும், பொய்ப்

பிரசாரம் செய்வதும், தமிழ் இனத்தைப் பிளவுபடுத்தி, தமிழகத்தைச் சீர்குலைக்கும் நாசவேலைகளாகும்.

"என் இனப்பெயர் தமிழன். என் தாய்நாடு தமிழ்நாடு. என் கோரிக்கை தமிழகத்தில் தமிழரசு காண்பது என் பொருளாதாரக் கொள்கை சோஷலிசம். எனது குடும்பம் இந்திய சமுதாயம். எனது சமரச நெறி சர்வதேச சகோதரத்துவம்" என்பவையே ஒவ்வொரு தமிழருடையவும் சிந்தனையா யிருக்கட்டும்.

வ. உ. சி. யின் பெயரால் அழைக்கின்றேன்: தமிழர்களே! ஒன்றுபடுவோம் வாருங்கள். தனி மனிதர்களின் பதவி வேட்கையால், கட்சிகளின் சுயநலத்தால் தமிழகம் சீரழிந்தது போதும். இனியேனும் வேற்றுமைகளை விட்டு ஒன்றுபடுங்கள். தமிழ் இனத்தார் ஒன்றுபட, தமிழகம் உரிமைபெறப் பாடுபடுவதுதான் வ.உ.சி. க்கு நாம் செய்யும் கைம்மாறு. அவரது ஆவி குரல் கொடுக்கிறது "தமிழர்களே ஒன்றுபடுங்கள்" என்று. கூர்ந்து நோக்குங்கள்.

ஆசிரியருக்குக் கடிதம்

அபயம்; ஆதரியுங்கள்!

ஐயா,

இப்பொழுது திருவாங்கூர் தமிழ் நாட்டின் நிலைமை மிகவும் நெருக்கடியாகிக் கொண்டு இருக்கிறது.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டங்களில் கலவரம் செய்ய சமஸ்தான காங்கிரஸ்காரர்கள் முயற்சிப்பதும், கலவரம் ஏற்படுத்தித் தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்கள் மேல் பொய் வழக்குகள் தொடுப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. கடந்த வாரம் குழித்துறை என்ற ஊரில் ஒரு மாபெரும் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில், சமஸ்தான காங்கிரஸ் காலிகள் கூட்டத்தில் கல்லெறிந்து கலவரம் செய்ய முயற்சித்தார்கள். ஆனால் முயற்சி முறியடிக்கப் பட்டது.

கூட்டம் நடந்த மறுநாள், மலையாளிகள் எல்லாம் சேர்ந்து குழித்துறையில் ஒரு கூட்டம் கூடி, தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் முந்தின நாள் கூட்டம் முடிந்ததும் மலையாளிகள் வசிக்கிற வீட்டை இடித்து, கொள்ளை யடித்ததாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியதோடு கூட, ஐந்து பேர்களடங்கிய குழு ஒன்றை நியமித்து மறுநாள் திவானைக்கண்டு பேசினார்கள்.

மலையாளிகள் திவானைப் பேட்டிகண்ட மறுநாள் முதற் கொண்டே நூற்றுக்கணக்கான ராணுவத்தினர் கல்குளம், விளவங்கோடு முதலிய தமிழ்த் தாலுக்காக்களில் அடக்குமுறை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரை தி. த. நா. காங்கிரஸ் ஊழியர்களும், ஏழை மக்களுமாக சுமார் 75 பேர் கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். கைது செய்யும்பொழுது தெருக்களில் வைத்தே கைது செய்பவர்களை நையப் புடைக்கிறார்கள். கைது செய்து எங்கு கொண்டு செல்கின்றார்கள் என்பதோ, அவர்கள் என்ன நிலைமையில் இப்பொழுது இருக்கிறார்கள்

என்பதோ எங்களால் அறிய முடியவில்லை. அவர்கள் பேரில் மலையாளிகளின் வீடுகளில் களவு, கொள்ளை, கலவரம் செய்ததாக பொய்க்குற்றங்கள் சாட்டி வழக்கு தொடர்கின்றனர்.

ராணுவத்தார்கள் தி. தமிழ்நாடு முழுவதும் இரவும், பகலும் சுற்றிக்கொண்டே இருக்கிறார்கள். ரோடுகளில் செல்கின்ற ஆண்களையும், பெண்களையும் பயமுறுத்துவதும், சிலரை உதைப்பதும், சந்தேகிக்கத்தக்கவர்கள் என்று சிலரைக் கைது செய்வதும் துரிதமாக நடக்கிறது.

சமஸ்தான காங்கிரஸ் மலையாளிகள், ராணுவ லாரியில் ராணுவத்தாருடன் சென்று, தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்களைக் கைது செய்வதற்கு உதவி புரிகிறார்கள். இரண்டு தாலுக்காக்களிலும் பல்வேறு இடங்களில் வசிக்கிற மலையாளிகள் அவர்களது வீடுகளிலோ, கடைகளிலோ இருக்கிற பொருள்களை அவர்களே நாசம் செய்துவிட்டு, தி. த. நா. காங்கிரஸ் காரர்கள்தான் அதைச்செய்ததாக அதிகாரிகளுக்குப் பொய்த் தகவல்கள் கொடுத்து, தமிழர்களைத் தொல்லைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். மலையாள பத்திரிகைகள் எல்லாம் தமிழருக்கு எதிராக தீவிரமாகப் பிரசாரம் செய்கின்றன.

உதாரணமாக 'சுதந்திர காஹளம்' என்ற C. நாராயண பிள்ளையின் (மாஜி சமஸ்தான காங்கிரஸ் காரியதரிசி) பத்திரிகை, 'குழித்துறையில் ஒரு மலையாள கர்ப்பிணிப் பெண்ணைத் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் அடித்துக் கொன்றுவிட்டார்கள்' என்ற பொய்ச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. நமது தமிழ்நாட்டுப் பத்திரிகைகளோ செய்திகள் அனுப்பினால் சரியாக வெளியிடுவதில்லை. நிலைமை வர வர நெருக்கடியாகி வருகிறது. நாங்கள் அறிந்ததில் தேர்தலுக்கு முன்னதாகவே தி. த. நா. காங்கிரஸ் காரர்கள் எல்லோரையும் கைது செய்து விடுவார்கள் என்று தெரிகிறது.

அடக்குமுறை திரு. சி. பி. யின் ஆட்சியை விடக் கேவலமாய் இருக்கிறது. ராணுவத்தார் தமிழ்ப்பெண்களையும் தொல்லை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

சமஸ்தான காங்கிரசில் மெம்பராகச் சேர்ந்தால்தான் உணவுப் பங்கீடு தரப்படும் என்று ஏழை மக்களிடம் சில பங்கீடு கடைக்காரர்கள் சொல்வதும், கருஞ்சந்தையில் நெல் விற்ற ஒரு வியாபாரியைப் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்ததற்கு, பிடித்துக்கொடுத்தவர்கள் பேரில் ரேஷன் கடையைக் கொள்ளையடித்ததாக வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். காரணம் உத்தியோகஸ்தர்கள் எல்லாம் மலையாளிகளா யிருப்பதுதான்.

இப்பொழுது திவானாய் இருக்கும் திரு. உண்ணித்தான், முன்பு பட்டம் தாணுபிள்ளை ஆசிரியராக இருந்த காலத்தில் அவரிடத்தில் கல்வி பயின்றவர். ஆதலால், இப்பொழுது அரசாட்சி நடத்துவது உண்ணித்தானாய் இருந்தாலும், பட்டம் தாணுபிள்ளையின் ஆலோசனைப்படிதான் எல்லாம் நடக்கிறது. தற்போது, திருவனந்தபுரம் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டாக இருப்பவரது மனைவியும், பட்டம் தாணுப்பிள்ளையின் மனைவியும் சகோதரிகளாவர்.

நாகர்கோவிலில் இப்பொழுது உதவி போலீஸ் சூப்ரெண்டாக இருக்கிற திரு. அச்சுதன் தான், திரு. சி. பி. திவானாக இருந்த காலத்தில் ஆலப்புழையில் வயலார், புன்னப்புரை போராட்டத்தில் உழைப்பாளிகளைக் கொடுமைப்படுத்திய கூற்றுவன். இதனால் திருவாங்கூர் தமிழர்களுக்கு தற்பொழுது இருக்கிற மலையாள உத்தியோகஸ்தர்களிடமோ, அரசாங்கத்திடமோ, யாதொரு நம்பிக்கையும் கிடையாது. ஆதலால் தாங்கள் இது விஷயத்தில் மிகுந்த அக்கரை எடுக்கும்படி தாழ்மையாய்க்கேட்டுகொள்கிறேன்.

இப்படிக்கு
கே. நாகலிங்கம்,
தி. த. நா. காங்கிரஸ் ஊழியன்

மதிப்புரை

பாலர் பாடல் :—ஆசிரியர் அழ. வள்ளியப்பா; தமிழ் நிலையம், பாலர் மலர் நிர்வாகம், புதுக்கோட்டை. விலை ஐந்தணா.

பாலர்கள் படித்துக் களிப்பதற்கேற்ற வகையில் எளிய தமிழில் இனிய கருத்துக்கள் அடங்கிய உரை நடைப் பாடல்கள் நிறைய உள்ளன. குழந்தைப் புத்தகங்கள் தமிழில் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றன என்பதற்கு இந்நூல் தக்க சான்று.

வ. உ. சி. யின் வீரகர்ஜனை : எழுதியவர் : கி. பிச்சமூர்த்தி; சமதர்ம நிலையம், குளித்தலை, திருச்சி மாவட்டம். விலை பன்னிரண்டணா.

இந்நூலாசிரியர் வ. உ. சிதம்பரனார்மீது பற்றுளங் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார். "கப்பலோட்டிய தமிழனை" எதிரொலி செய்கின்றது இந்நூல். ஆங்காங்கே வ. உ. சி. யின் பேச்சுக் குறிப்புகளும் காணப்படுகின்றன.

'மருத்துவ மணி' :—(மாத வெளியீடு) :— ஆசிரியர் : வி. என். ராஜு; 'மருத்துவ மணி' செயலகம், நாமக்கல், சேலம். விலை ஓர் அணா.

மருத்துவ சாதியினரின் முன்னேற்றத்தைக் கருதி வெளி வருவது. ஒடுக்கப்பட்டுள்ள மருத்துவ சாதி மக்களை உன்னத நிலைக்குக் கொண்டுவரும் அறிவியக்கக் கட்டுரைகளும் கவிதைகளும் இதில் மிளிர்கின்றன.

'வணிக ஜோதி' (மாத மிருமுறை) :—ஆசிரியர். கோ. சு. திருஞான சம்பந்தம். கெ. 1, மலைபெருமாள் தெரு, சென்னை. விலை நாலணா.

வணிக சாதியினரின் நன்மையைக் கருதி வெளி வருவது. திருத்தமான தமிழில் பல அரிய கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன.

புரட்சி முரசு :— இயற்றியவர் : என். இ. பாலகுரு. அர்ச்சுனன் நிலையம், ஈரோடு. 48 பக்கங்கள், விலை அணா 12.

எளிய தமிழில் இனிய பாக்கள் கொண்டது இந்நூல். கவிஞரது ஆழ்ந்த மொழிப்பற்றும் இனப் பற்றும் இந்நூலில் வெளிப்படுகின்றன. சமூக ஊழல்களால் ஏழை மக்கள்படும் இன்னல்களை இசைத்தமிழால் படம் பிடித்துக் காட்டுகிறார். இலக்கணப் பிழைகள் பல இருப்பினும் எண்ணங்கள் சிறப்புடையவை.

தொழில் (மாத மிருமுறை) :— ஆசிரியர் : கே. பெருமாள் உடையார். 26 மாவடி விநாயகர் கோவில் தெரு, ராயப்பேட்டை, சென்னை. விலை மூன்றணா.

ஆசிரியர் சிறந்த காங்கிரஸ் ஊழியர். தொழில் பற்றிய கட்டுரைகளும், தொழிலாளர் இயக்கம் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

'பாலர் மலர்' (தீபாவளி வெளியீடு) : ஆசிரியர் : வி. எஸ். நடேசன், ராயவரம், புதுக்கோட்டை. விலை ரூபாய் ஒன்று. பல வர்ணங்களுடன்கூடிய நிகழ்ச்சிச் சித்திரங்கள், கதைகள், வரலாறு, பாடல் ஆகியவைகள் நிறைந்திருக்கின்றன.

'சிற்பி' (தீபாவளி வெளியீடு) : ஆசிரியர்: ஜெக சிற்பியன். 5, பிளவர்ஸ்ரோடு, வேப்பேரி, சென்னை.

சிறந்த எழுத்தாளர்களின் படங்கள் மலரை அணிசெய்கின்றன. இனிய கதைகளும் கட்டுரைகளும் வழக்கம்போல் இடம் பெற்றிருக்கின்றன. 'சிற்பி' நாளுக்கு நாள் வளர்ச்சி பெறுவது கண்டு மகிழ்ச்சி யடைகிறோம்.

'காதல்' (மாத வெளியீடு) : ஆசிரியர் : அரு. இராமநாதன். மதுரா ரோடு, திருச்சி. விலை எட்டணா.

ஆண் பெண் தூய்மையாக வாழ, காதலர்களுக்கு வழிகாட்ட 'காதல்' வெளி வருவதாக ஆசிரியர் அறிவிக்கிறார்.

குரல்: வெளியிட்டோர்: மக்கள் மன்றம் பாலக்கரை, திருச்சி, விலை அணா ஐந்து.

'பத்மஜோதி' (மாத மிருமுறை) ஆசிரியர்: நா. சின்னையா செட்டியார்; 11, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை. விலை அணா 3. ஆண்டுக்கட்டணம் ரூ. 4-0-0.

சோஷலிஸ்டுகளுக்கு அறைகூவல்: இயற்றியவர்: ஏ. வேங்கடாசலம்; அருணா புக் பப்ளிஷர்ஸ் புதுச்சேரி; விலை அணா எட்டு.

பாரதி மலர்: பதிப்பாசிரியர்: 'இளங்கதிர்', பாரதி பப்ளிசிட்டி, வடுகபாளையம், பொள்ளாச்சி. விலை நான்கணா.

'வழிகாட்டி' (மாதம் இரு முறை):— ஆசிரியர்: இ. மாணிக்கம். உறையூர், திருச்சி. விலை ஒன்றரையணா.

'தமிழ் நிலம்' (வார வெளியீடு) ஆசிரியர்: குடியேற்றம் மு. அண்ணல்தங்கோ; 77, நயினியப்பன் தெரு, சென்னை. விலை அணா 3.

இதன் ஆசிரியர் தமிழர் முன்னேற்றத்துக்காக நெடு நாட்களாகப் பாடுபடுபவர். அவரது கருத்தோவியங்களைத் தூய தமிழில் இனிய நடையில் எடுத்துக் காட்டுகிறது இவ் வெளியீடு. தமிழகத்தின் விடுதலைக்கு — தமிழர் முன்னேற்றத்திற்கு துணைசெய்யும் இயக்கத்தைப்பற்றிய செய்திகளும் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழர் ஒவ்வொருவரும் இவ் வெளியீட்டைத் தவறாமல் படித்துப் பயன் பெறுவாராக.

தமிழ்க்குரல்: (மாதம் இரு முறை) ஆசிரியர்: கு. மா. பாலசுப்பிரமணியம்; ராயவரம், புதுக்கோட்டை.

தமிழரசு இயக்கத்தை ஆதரிக்கிறது இவ் வெளியீடு. இன உணர்ச்சியைப் பரப்பும் கட்டுரைகள் பல மிளிர்கின்றன. தமிழ்க் குரல் இல்லந்தோறும் ஒலிக்கட்டும்.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம், 1-29 இருசப்ப கிராமணி தெரு. திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	6—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—0—0
தனி இதழ்	ரூ.	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	7—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—8—0
தனி இதழ்	ரூ.	0—5—0

விளம்பர விகிதம்

(ஒரு இதழில் வெளியிட)

அட்டை (வெளிப்புறம்)	ரூ.	100.
அட்டை (உட்புறம்)	ரூ.	75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ.	50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ	25.

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

Wrapper Printed at the Sengunthа Mithran Press, Madras 1